விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினெட்டு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 வைகாசி 17 திங்கட்கிழமை (31.05.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 163



ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து


# ஜனாதிபதி இந்தியா சென்றுவந்த பின் இலங்கையில் சமாதானப் பேச்சுவார்த்தை

## அரசியல் வட்டாரங்களில் எதிர்பார்ப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இந்திய விஜயத்தைத் தொடர்ந்து இலங்கையின் சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகவுள்ளன என்று அரசியல் வட்டாரங்களில் எதிர்பார்க்கப்படுகிறது. தீர்வுத்திட்டத்தின் அடிப்படையில் பேச்சுவார்த்தை இடம்பெறும் எனவும் கூறப்படுகிறது. (18ஆம் பக்கம் பார்க்க)

## லங்கா பத்திரிகையின் செய்தியாளர் மீது தாக்குதல்

(கொழும்பு)

ஜேவிபி ஆதரவுப் பத்திரிகையான லங்கா பத்திரிகையின் ஊடகவியலாளர் ஒருவர் தாக்கப்பட்டுள்ளதாக அதன் ஆசிரியர் சந்தன சிறிமல்வத்த தெரிவித்துள்ளார்.

மொனராகலையில் கலைவிழா ஒன்றிற்கான ஒழுங்குகளை மேற்கொண்டிருந்த போதே உள்ளூர் ஆளும்கட்சி அரசியல்வாதியின் குண்டர் படையால் இவர் தாக்குதலுக்குள்ளானதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வூடகவியலாளரைத் தாக்கியவர்கள் அவருடைய கைத்தொலைபேசியையும் எடுத்துச் சென்றுள்ளனர். தாக்குதலுக்கு வந்த குண்டர்களுடைய வாகனத்தையும் அவ்வூடகவியலாளர் படம் பிடித்துள்ளார்.

பொலிசாரின் தலையீட்டையடுத்து இரு தரப்பினருக்குமிடையில் சமரச முயற்சி மேற்கொள்ளப்பட்டது. (18ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பின் தலைவர் உருத்திரகுமாரா? 4ஆம் மாடிக்கு அனுப்ப அரசு சதித்திட்டம்!

### என்கிறார் அரியநேத்திரன் எம்.பி.

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை நாலாம் மாடிக்கு கொண்டுசென்று அடைத்து வைப்பதற்கான அரசின் சதித்திட்ட நிகழ்ச்சி நிரலின் ஒன்றாகவே கூட்டமைப்பின் தலைவராக நாடுகடந்த தமிழீழ அரசின் முக்கியஸ்தர் உருத்திரகுமார் நியமிக்கப்பட உள்ளார் என்று சிங்கள பத்திரிகைகளில் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று அக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

இத்தகைய திட்டமிட்ட பிரசாரங்களை நம்பி தமிழ் ஊடகங்கள் அச்செய்தியைப் பிரசுரிப்பதன் மூலம் தமிழ்ச் சமூகத்தை அச்சத்தில் மூழ்கடித்து விடக்கூடாது என்றும் அவர் கோரினார்.

கூட்டமைப்பின் தலைவராக நாடுகடந்த தமிழீழ அரசின் முக்கியஸ்தர் வி.உருத்திரகுமார் நியமிக்கப்படவுள்ளார் என்று தெரிவித்து லங்காதீப (18ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கரை கொலை செய்ய முயற்சி

(பெங்களூர்)

யோகா குரு ஸ்ரீஸ்ரீ ரவிசங்கரை கொலை செய்ய முயற்சி நடந்துள்ளது. பெங்களூரில் உள்ள தனது ஆச்சிரமத்திலிருந்து காரில் சென்ற யோகா குரு ஸ்ரீஸ்ரீ ரவிசங்கரை மர்மநபர் ஒருவர் காரை நோக்கி துப்பாக்கியால் சுட்டுள்ளார்.

ஆனால் அதிர்ஷ்டவசமாக ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் காயமின்றி உயிர் தப்பினார். இந்தச் துப்பாக் கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்தார். உடனடியாக பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந் துள்ளார். (18ஆம் பக்கம் பார்க்க)

# பொலிஸ் அதிகாரங்கள் எப்போதும் மத்திய அரசிடமே இருக்க வேண்டும்!

## ரைம்ஸ் ஒவ் இந்தியாவுக்கு ஜனாதிபதி செவ்வி

(புதுடில்லி)

ஒரு நாட்டில் பொலிஸ் அதிகாரங்கள் எப்போதும் மத்திய அரசிடமே இருக்க வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ரைம்ஸ் ஒவ் இந்தியாவுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தியா, தமிழீழ விடுதலைப் புலிகளுடனான இறுதிப் போரின் போது ஆயுதரீதியாகவும் இலங்கைக்கு ஆதரவளித்தது எனவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இறுதிப் போரின்போது இந்தியா எவ்வாறு ஆதரவளித்தது எனக் கேட்ட கேள்விக்கு அவர் இந்தப் பதிலை வழங்கியுள்ளார்.

### இந்தியா பூரண ஆதரவு

ஆம்,யுத்தத்தின்போது தார்மீக ரீதியாகவும் ஆயுத ரீதியாகவும் இலங்கைக்கு இந்தியாவின் ஆதரவு தேவைப்பட்டது என்ற பதிலின் மூலம் ஜனாதிபதி இதனை ஏற்றுக்கொண்டு உள்ளார்.

ஆயுதக் கொள்வனவு என்பது இராணுவத் தீர்மானமாகும். (18ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் சேவைக்கு இணைக்கப்பட்டோர் பயிற்சிக்காக களுத்துறைக்கு சென்றனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் பொலிஸ் சேவைக்காக தேர்வு செய்யப்பட்ட 266 இளைஞர், யுவதிகள் பயிற்சி வழங்குவதற்காக நேற்று களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

யாழ்.மாவட்டத்திலிருந்து பொலிஸ் சேவைக்கு நேர்முகப்பரீட்சை மூலம் தேர்வு செய்யப்பட்ட இளைஞர்,யுவதிகளுக்கு நியமனக் கடிதங்கள் கடந்த 18ஆம் திகதி வழங்கப்பட்டது.

இவ்வாறு பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களில் 247 இளைஞர்களும் பெண் கான்ஸ்டபிள்களுக்கு தேர்வானவர்களில் 15 யுவதிகளும் நேற்று பயிற்சி வழங்குவதற்காக களுத்துறை பொலிஸ் பயிற்சி கல்லூரிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டவர்கள் நேற்றுக்காலை 9.00 (18ஆம் பக்கம் பார்க்க)

## மீட்கப்பட்ட சடலங்கள் பெண்களுடையவை?

(வவுனியா)

கிளிநொச்சி நகரை அண்டிய கணேசபுரம் பகுதியில் மீட்கப்பட்ட சடலங்கள் பெண்களுடைய சடலங்கள் என கூறப்பட்டுள்ளது.

கணேசபுரம் பகுதியில் மீள்குடியேற்றத் திற்காகச் சென்ற காணி உரிமையாளர் ஒருவர் தனது வீட்டு மலசலகூடக் குழியைத் துப்பரவு செய்தபோதே இந்தச் சடலங்கள் குழிக்குள் இருந்து கண்டறியப்பட்டது.

கறுத்த பொலித்தீன் பைகளில் கட்டப்பட்ட நிலையில் ஐந்து, ஆறு சடலங்கள் அந்தக் குழிக்குள் இருந்ததைக் கண்டதாக சம்பவ இடத்திற்குச் சென்று நிலைமையைப் பார்வையிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பின ராகிய சிவஞானம் (18ஆம் பக்கம் பார்க்க)

# மனித உரிமை மீறல் சம்பவங்கள் வெளிவர ஐ.நா. உதவ வேண்டும்

## நீதி விசாரணையாளர் இக்பால் வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கையில் யுத்தத்தின் இறுதி நாட்களில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் வெளிச்சத்துக்கு வர வேண்டுமானால் ஐக்கிய நாடுகள் சபையால் சர்வதேச மட்டத்தில் நீதி விசாரணை ஒன்று கட்டாயம் இடம் பெற வேண்டும்.

இவ்வாறு காணாமல் போதல்கள், படுகொலைகள் குறித்து விசாரிக்க இலங்கை அரசினால் கடந்த காலங்களில் நியமிக்கப்பட்டிருந்த இரு ஆணைக்குழுக்களின் செயலாளராகக் கடமையாற்றிய எம்.சி.எம்.இக்பால் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசு உள்நாட்டு விசாரணை ஆணைக்குழுக்களின் கண்டு பிடிப்புக்களையோ சிபார்சுகளையோ ஒரு போதும் ஏற்றுக்கொள்வதே இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்துள்ளதாவது,

இலங்கை அரசு உள்நாட்டு விசாரணை ஆணைக்குழுக்களின் கண்டு பிடிப்புக்களையோ சிபாரிசுகளையோ ஒருபோதும் ஏற்றுக்கொள்வதே இல்லை. உண்மையான நீதியை நிலைநாட்டவும் இவ்வாணைக்குழுக்கள் முன்வைக்கின்ற சிபாரிசுகளை ஒருபோதும் நடைமுறைப்படுத்துவதும் இல்லை.

இலங்கையில் யுத்தத்தின் இறுதி நாட்களில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் வெளிச்சத்துக்கு வர வேண்டுமானால் ஐக்கிய நாடுகள் சபையால் சர்வதேச மட்டத்தில் நீதி விசாரணை ஒன்று கட்டாயம் இடம் பெறவேண்டும்.

கடத்தல்கள், சட்டவிரோதகைதுகள், சட்டவிரோத தடுப்புக்கள், காணாமல் போதல்கள், நீதிக்குப் புறம்பான கொலைகள் என்பன இலங்கை அரசின் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தில் இன்று வரை தொடரவே செய்கின்றன. இவற்றையெல்லாம் இனம் தெரியாதோர் செய்கிறார்கள் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

அவர்கள் இவை தொடர்பில் சிலவேளைகளில் மாத்திரமே விசாரணை நடத்துகின்றனர். பொலிஸாரின் தடுப்புக் காவலில் சித்திரவதை வெகு சாதாரணமாகவே இடம் பெறுகின்றது. இத்தடுப்புக்காவலில் மரணங்கள் நேர்ந்தால் தப்பிஓட முயன்ற சந்தேக நபரை சுட்டு விட்டனர் என்று பொலிஸார் கூறிவிடுகின்றனர். இவையெல்லாம் ஒரு பம்மாத்து என்பதை சகலரும் நன்கு அறிவர் என்றார். (ச-5)


தகவல் தொழில் நுட்பத்தில் நீங்களும்

University of Colombo

A/L? Pass → BIT
No → FIT → BIT



Just 25,000 Rs.Only(annually)
( for first 20 students)

Full scholarship for
Computer Engineering(USA),Sun Java, BCS,ICDL, Linux Admin(Canada),A+Hardware Tech(Australia)

Part scholarship for
CCNA,CCNP(USA),Sun Solaris, Toefl, RedHat Engineer(USA),Web Engineer(Canada)

Authorised Testing centre for Microsoft,Sun Microsystem, Toefl, CIMA, ICDL,CISCO

பல்கலைக்கழக மாணவர்களும் BIT கற்கைநெறியைப்பயில்வதற்கு பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. பரீட்சைகள் கொழும்பு பல்கலைக்கழகத்தினால் யாழ் பல்கலைக்கழகத்திலும் விரிவுரைகள் MCS நிறுவனத்திலும் நடாத்தப்படுகின்றன.

MCS
Supported By
UNDP/JRRP

கொழும்பு பல்கலைக்கழகத்திடமிருந்து சிறப்பு விருது பெற்ற நிறுவனம்
எமது திறமை எமது விரிவுரையாளர்களாலும், எம் மாணவர்களாலுமே

பதிவுகளுக்கு நேரில் MCS, 324, Palaly Road, Jaffna. T.P-772395895


# அரச இல்லங்களிலிருந்து வெளியேற முன்னாள் எம்.பிக்களுக்கு உத்தரவு

(கொழும்பு)

அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வீடுகளில் தங்கியுள்ள முன்னாள் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களை அங்கிருந்து வெளியேற வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஜாவத்தை பகுதியில் அமைந்துள்ள அரச தொடர் மாடிக்கட்டிடத்தில் தங்கியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்னும் இரண்டுவாரத்திற்குள் அங்கிருந்து வெளியேற வேண்டும் என்று பொது நிர்வாகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோகித்த போகொல்லாகம, எம்.எஸ்.செல்லச்சாமி, ரஞ்சித் அலுவிஹார, அமீர் அலி உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்கள் 8 பேருக்கு இந்த அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதென்று மேற்படி அமைச்சின் செயலாளர் டி.திசாநாயக்க தெரிவித்தார்.

குறித்த இரண்டுவார காலப் பகுதிக்குள் மேற்படி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்மாடிக்கட்டிடத்திலிருந்து வெளியேற வேண்டும் என்று தெரிவித்த அமைச்சின் செயலாளர், அவ்வாறு அவர்கள் அங்கிருந்து செல்லத் தவறும் பட்சத்தில் புதிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் கூறினார்.

இருப்பினும் மேற்படி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடும் பட்சத்தில் அந்த காலக் கெடுவினை இரண்டு மாதங்களாக அதிகரிக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-5)

# தமிழ் பெண்களின் தாலிக்கு லண்டனில் பெரும் சோதனை

(லண்டன்)

லண்டனில் இலங்கைத் தமிழர்களை இலக்கு வைத்து கடந்த ஒரு மாத காலமாக ஏராளமான கொள்ளைகள் இடம் பெற்று வருகின்றன.

லண்டன் பொலிஸார் கொள்ளையர்களைக் கண்டு பிடிக்கப் புலனாய்வு விசாரணைகளை முடுக்கி விட்டுள்ள போதிலும் குற்றவாளிகள் எவரும் இன்னமும் சிக்கவே இல்லை.

லண்டனின் தென்மேற்குப் பகுதியில் உள்ள டவுண்டரி என்கிற நகரத்தில் சுமார் 25 சம்பவங்கள் இப்படி இடம்பெற்றுள்ளன.

இவை அனைத்தும் பட்டப்பகலிலேயே இடம் பெற்றுள்ளன. தாலி உட்பட தங்க நகைளை அணிந்து கொண்டு ஆலயங்களுக்குச்செல்கின்ற திருமணமான தமிழ் பெண்கள் வழிப்பறி கொள்ளையர்களால் இலக்கு வைக்கப்படுகிறார்கள்.

அதேபோல தமிழர் வீடுகளும் இலக்கு வைக்கப்படுகின்றன. பகல் நேரங்களில் ஆண்கள் வேலைக்குச்சென்று விடுகின்றமையால் இது கொள்ளையர்களுக்கு வாய்ப்பாக அமைகின்றது.

டவுண்டரி நகரத்தில் கடந்த ஒரு மாதத்தில் கோவிலுக்கு நகைகள் அணிந்து சென்ற 10 பெண்கள் தாலிஉட்பட ஏராளமானநகைகளைக் கொள்ளையரிடம் பறிகொடுக்க நேர்ந்தது.

தென்னாபிரிக்கக் கறுப்பர்களே இவ்வழிப்பறிக் கொள்ளைகளில் ஈடுபட்டுள்ளனர் என்று பாதிக்கப்பட்ட பெண்கள் தெரிவிக்கின்றனர். தாலி அணியாமல் எப்படிக் கோவிலுக்குச் செல்ல முடியும் என்று பெண்கள் வினவுகின்றார்கள்.

அதேநேரம் இதே பகுதியில் 15 தமிழர் வீடுகளில் கொள்ளைகள் இடம் பெற்றுள்ளன. எனவே இப்பகுதியில் உள்ள வீடுகளுக்கு கமரா பொருத்துங்கள் என்றும் அபாய மணி பொருத்துங்கள் என்றும் பொலிஸார் கோரி உள்ளார்கள். (ச-5)

## கணனிப் பொறியியலாளர் கற்கைக்கு அரச புலமைப்பரிசில்

(யாழ்ப்பாணம்)

தகவல் தொழில்நுட்பத் துறையை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் கணனிப்பொறியியலாளர்கள் கற்கை நெறிக்கு அரசு ஐ.சி.ரி.ஏ. ஊடாக புலமைப்பரிசில்களை வழங்கி வருகிறது.

இத்திட்டத்தில் இணைய விரும்பும் யாழ். மாவட்ட மாணவர்கள் இல. 324 பலாலி வீதி பரமேஸ் வராச்சந்தியில் அமைந்துள்ள எம்.சி.எஸ். தகவல் தொழில்நுட்ப வளாகத்துடன் தொடர்பு கொள்ளலாம். மேலதிக விபரங்களை நிறுவனத்தில் அல்லது http://www.futureisit.lk என்னும் இணையத்தளத்தில் அறிந்து கொள்ளலாம். (ச-5)


யாழ் மாவட்டத்தில் UNI ICT Campus மட்டுமே வழங்கும்!!!

Diploma in Architecture CAD

(3D AND 2D Building Technology With 3D Studio Max & Architecture CAD)

கற்கை நெறியை சிறப்பாக பூர்த்தி செய்த எமது முதலாம் அணி மாணவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்!!!



Mr.S.Sivanesarajah Urumpirai | Mr.K.Kajeevakumar Jaffna | Mr.V.Thasheevan Jaffna | Mr.S.Karthikeyan Jaffna
Mr.A.Alvappillai Pointpedro | Mr.S.Thanachayan Jaffna | Mr.I.Athavan Jaffna

வார மற்றும் வார இறுதி நாள் வகுப்புக்கள் !!!

மாதாந்தம் ரூபா 40000/= மேல் உழைக்க முடியும் (குறைந்த பட்சம்)

இக் கற்கை நெறியின் பயன்கள் சில....

இன்றைய உலகில் மிகவேகமாக வளர்ந்து வரும் கட்டட நிர்மாணத்துறையில் கணனி மூலம் கட்டட வரைபடம் வரையும் படவரைஞர்களுக்கும் தொழில் நுட்ப உத்தியோகத்தர்களுக்குமான வேலைவாய்ப்புக்கள் நிறைந்து காணப்படுகின்றன. கணனி மூலம் கட்டட வரைபடம் வரைதலில் சிறப்பு தேர்ச்சி பெற்றோருக்கு ஏராளமான தொழில் வாய்ப்புக்கள் மத்திய கிழக்கிலும் ஏனைய நாடுகளிலும் காணப்படுகின்ற அதேவேளை கூடுதல் வருமானமும் உறுதிப்படுத்தப்படுகின்றன.
இக் கற்கை நெறியானது Draftsman, Construction Supervisor, Technical Officers, Junior Quantity Surveyors, Land Surveyors Civil Engineers போன்றவர்களுக்கு மிகவும் பயனுள்ள கற்கை நெறியாகும்.

தொழில் புரிவோருக்கான இரவு நேர வகுப்புக்களும் உண்டு.

எமது இந்திய விரிவுரையாளரின் சிறப்பான வழிகாட்டுதலில் 05/06/2010 பிரிவு - 2 ஆரம்பம் (சனிக்கிழமை 2 PM) இன்றே உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்.

UNI - ICT Campus - No - 83, Palaly Road,Kantharmadam, Jaffna.
விபரங்களுக்கு:- T.P - 021 321 6433 / 0777 110 862 (Branches - Jaffna & Manipay)



### வேலையாட்கள் தேவை

புடவைக் கடைக்கு பெண் விற்பனையாளர்கள் தேவை. பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்

தொடர்பு: தணிஸ் ரெக்ஸ்
மூத்தநயினார் கோவிலடி,
நவாலி வீதி,
ஆனைக்கோட்டை. (C-354)

### வெளிவாரி விசேட கருத்தரங்கு

கணிதமும் புள்ளிவிபரவியலும்
ஆசிரியர் த.தவசேகர்
ஆரம்பம்:-01.06.2010
செவ்வாய் (மாலை)
1st Com 4-5
Part I 5-6
Part II 6-7
வார நாட்களில் தினமும் நடைபெறும்.
DMI ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம். (C-355)

# இன்று ஒரு தகவல்

## பதவியும் பண்பும்

என்னுடன் படித்த ஒருத்தர் ஒருநாள் மிகவும் கவலை யோடு வந்தார்.

என்ன விடயம் என்று விசாரித்தேன்.

அவர் சொன்னார்:

சின்ன வயதில் நம்மோடு கூடப் படித்த ஒருத்தன் இப்ப ஒரு பதவியில் இருக்கிறான். சும்மா அவனைப் பார்த்து வாழ்த்துச் சொல்லி விட்டு வரலாம் என்று போனேன்.

"அவன் சரியாக முகம் கொடுத்துப் பேசவில்லை. ஏதோ ஒரு அற்பப் புழுவை பார்ப்பதுபோல என்னைப் பார்த்தான். அது தான் மனம் ஒரு மாதிரியாகி விட்டது. உன்னிடம் வந்தேன்" என்றார்.

"கவலைப்படாதீங்க... இப்பொழுதெல்லாம் பலர் அப்படித்தான் ஆகி விடுகிறார்கள்.

பதவி பெருகப் பெருக பண்பு குறைந்து விடுகிறது. இடம் உயர உயர இதயம் குறுகிப் போய் விடுகிறது. இதயம் விசாலமானவர்களை இதிகாசங்களில் தான் பார்க்க முடிகிறது" என்றேன்.

" என்ன அப்பாடிச் சொல்கிறீர்கள்? என்றார்.

"ஆமாம்- என்று சொல்லி அவரை உட்காரவைத்து குசேலர், கண்ணனைப் பார்க்கப் போன கதையைச் சொன்னேன்.

குசேலர் கிருஷ்ணனைப் பார்ப்பதற்காக புறப்பட்டுப் போகிறார். போகும் போது அவருக்குக் கொடுப்பதற்காக பழைய துணி மூட்டையில் கட்டி அவல் கொண்டு போகிறார்.

கிருஷ்ணன் அந்த அவல் மூட்டையை வாங்கிப் பிரிக் கிறார். குசேலர் அதைப் பார்க்கிறார்.

அவருடைய மனம் மிகவும் சங்கடப்பட்டது.

"நான் எங்கே? கிருஷ்ணன் எங்கே? நான் ஏழை, வறிய வன். கிருஷ்ணனோ பேரரசன், இறைவன். என்னுடைய அழுக்கான துணியை அவருடைய கையால் தொட லாமா?" இப்படியெல்லாம் நினைக்கிறார்.

ஆனால் கிருஷ்ணர் அவர் பாட்டுக்கு மூட்டையைப் பிரித்தார். அவலை எடுத்துச் சாப்பிட ஆரம்பித்தார்.

இன்னும் கொஞ்ச அவல் மீதியாக இருந்தது. மூன்றாவது பிடி அவலை வாயில் போட்டுக் கொள்ளப் போனார்.

அந்தச் சமயத்தில் ருக்மணி ஓடி வந்து கிருஷ்ணனின் கையைப் பிடித்ததும் ஆச்சரியமாகி விட்டது.

நாம் கொண்டு வந்த அவலை கிருஷ்ணன் சாப்பிடுவது ருக்மணிக்குப் பிடிக்கவில்லை போல இருக்குஎன்று நினைத்தார் குசேலர்.

ஆனால் கிருஷ்ணருக்கு ருக்மணியின் இதயம் புரிந்தது. ருக்மணிக்கும் கிருஷ்ணரின் இதயம் புரிந்தது. குசேலர் ருக்மணியைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக கிருஷ்ணர் பேச ஆரம்பித்தார்.

ருக்மணியைப் பார்த்துச் சொன்னார்:

"எதற்காக நீ என் கையைத் தடுத்து நிறுத்தினாய்? நான் குசேலனின் சேவகன். அவர் கொண்டு வந்த அவலை நான் ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்றார். இதற்கு ருக்மணி சொன்ன பதில் என்ன தெரியுமா? "கிருஷ்ணா! நீ குசேலனுக்குத் தொண்டன். நான் உனக்குத் தொண்டு செய்பவள். அந்த உரிமை காரணமாக எனக்கு இந்த அவலில் பங்கு வேண்டாமா? எனக்குள்ள பங்கை நான் கேட்கிறேன்" இது தான் ருக்மணியின் பதில்.

ஆன்மீக எண்ணங்களெல்லாம் எந்த அளவுக்கு விசா லத்தன்மை வாய்ந்தவை -என்பதை நாம் புரிந்து கொள் வதற்காகத் தான் சான்றோர்கள் (சாய்பாபா) இந்தச் சம்பவத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

பதவி உயரும் போது பண்பும் உயர வேண்டும். பழைய நட்புகளை மறந்து விடக் கூடாது.

இந்தக் காலத்தில் சாதாரண உயர்வையே மிகவும் பெருமை யாக நினைப்பவர்களும் உண்டு.

ஒருத்தர் சொன்னார்:

"நான் கடந்த ஒரு மாத காலத்தில் வாழ்க்கையில் மிகவும் உயர்ந்திருக்கிறேன்" என்றார்.

"எப்படி?" என்று கேட்டேன்.

"போன மாதம் காலில் அடிபட்டு ஆஸ்பத்திரியில் சேர்ந்தேன். அப்பொழுது மூன்றாவது மாடியில் படுத்திருந்தேன். இப்பொழுது ஏழாவது மாடிக்கு மாற்றியிருக்கிறார்கள்" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வடமராட்சி வலய பாடசாலைகளுக்கிடையிலான குழுநிலைப் போட்டிகளில் வெற்றி பெற்றோர்

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான பெரு விளையாட்டுப் போட்டியின் குழுநிலைப் போட்டிகளில் வெற்றிபெற்ற வலய பாடசாலை மாணவர்களின் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

வெற்றி பெற்றோர் விபரம் வருமாறு,

**உதைப்பந்தாட்டம்(19 வயதுப் பிரிவு)**

**ஆண்கள்**

யா/உடு. அமெ. மிஷன் கல்லூரி (முதலாமிடம்)

**17 வயது ஆண்கள்**

யா/ தேவரையாளி இந்துக் கல்லூரி (மூன்றாமிடம்)

**கபடி (19வயதுப் பிரிவு)**

**ஆண்கள்**

யா/ கலட்டி றோ.க.த.க பாடசாலை(முதலாமிடம்), வேலாயுதம் மகா வித்தியாலயம்(மூன்றாமிடம்)

**கிரிக்கெட்(19 வயதுப் பிரிவு)**

**பெண்கள்**

யா/மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை (முதலாமிடம்), யா/நெல்லியடி ம.ம.வி (இரண்டாமிடம்)

**வலைப்பந்து(15 வயதுப் பிரிவு)**

**பெண்கள்**

யா/வட.இந்து.மகளிர் கல்லூரி (முதலாமிடம்)

**வலைப்பந்து(17 வயதுப் பிரிவு)**

**பெண்கள்**

யா/வட.இந்து.மகளிர் கல்லூரி (மூன்றாமிடம்)

**கரப்பந்து(15 வயதுப் பிரிவு)**

**பெண்கள்**

யா/மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை(முதலாமிடம்)

**(19வயதுப் பிரிவு)**

**பெண்கள்**

யா/மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை(முதலாமிடம்) (6-24)

# தேசிய பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

(கொழும்பு)

தேசிய பாடசாலைகளுக்கான 66 அதிபர் வெற்றிடங்கள் இருப்பதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக கல்வியமைச்சின் செயலாளர் சுனில் எஸ். சிறிசேன தெரிவித்துள்ளார்.

இதற்கமைய அடுத்த மாதம் 21 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பங்கள் பத்தரமுல்லவில் உள்ள கல்வியமைச் சுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர விண்ணப்பதாரிக்கு விருப்பமான மூன்று தேசிய பாடசாலைகளை குறிப்பிட வேண்டுமென செயலாளரின் அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

# இம்முறை வடக்கு, கிழக்கு பல்கலைக்கழகங்களுக்கு அதிக மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்

### பல்கலை.மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இம்முறை பல்கலைக்கழகங்களுக்கு 22ஆயிரத்து 800 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் படவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரி வித்துள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு பல்கலைக்கழகங்களுக்கும் கூடுதலான மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் படுவார்கள் என ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமர நாயக்க குறிப்பிட்டார்.

நீண்டகாலமாக நிலவிய யுத்தம் முடிவுக்கு வந்துள்ளதால் அனைத்துப் பல்கலைக் கழகங்களினதும் கல்வி நடவடிக்கைகளை சீராக முன்னெடுக்க சந்தர்ப்பம் கிடைத்துள்ளது எனவும் பல்கலைக் கழங்களின் புதிய கல்வியாண்டை ஆகஸ்ட் மாதம் ஆரம்பிக்க அனைத்து பல்கலைக் கழகங் களினதும் நிர்வாகங்கள் இணங்கியுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டார். (6)

# பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம்

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்கக் கூட்டம் எதிர்வரும் 6ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு அனைத்து பழைய மாணவர் சங்க உறுப்பினர்களையும் புதிதாக இணைய விரும்புவோரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறது. இதேவேளை இக்கூட்டம் நேற்று நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

# இன்னிசை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

செல்வி அபர்ணா குகதாசனின் சிறப்பு இன்னிசை நிகழ்வு இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு தொல்புரம் கிழக்கு சுழிபுரத்தில் அமைந்துள்ள சிவபூமி முதியோர் இல்ல கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு இசை ஆர்வலர்கள் அனைவரும் வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (6)

# இராசி பலன்

*31-05-2010*
*(வைகாசி 17, திங்கட்கிழமை)*
*திருதியை காலை 6.50 மணிவரை*
*பூராடம் பிற்பகல் 4.59 மணிவரை*
*இராகுகாலம் 7.22-8.52 மணிவரை*
*சு பநேரம் 11.52-1.22 மணிவரை*
*சங்கடஹர சதுர்த்தி விரதம்.*

| | |
|---|---|
| மேடம் | சரீரப் பிரயாசை, பிரயாணம், கட்டுப்பாடு, தேவையற்ற பயம். |
| இடபம் | முழங்கால் வலி, காரியதாமதம், போசனசுகம், எதிரிகள் தொல்லை. |
| மிதுனம் | தேகநலன், நற்கீர்த்தி, புதிய பொருள் சேர்க்கை, முயற்சி கைகூடும். |
| கடகம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், ஆரோக்கியமான நிலை, தன வருவாய் , நல்ல செய்தி. |
| சிங்கம் | பணக்குறைவு, காரிய இடையூறு, குடும்பக் கவலை, பயணம். |
| கன்னி | தன்னம்பிக்கை குறைவு, உறவினர் சந்திப்பு, முயற்சி தாமதம், தனவிரயம். |
| துலாம் | கூட்டு முயற்சி, நற்கீர்த்தி, மனோதைரியம், போசன சுகம். |
| விருச்சிகம் | மனோசங்கடம், போசன சுகக் குறைவு, காரியதாமதம், அதிக செலவு. |
| தனுசு | வெகுமானம், தொழில் முன்னேற்றம், சயன சுகம், காரி சிந்தை. |
| மகரம் | சோம்பல் நிலை, பிறருக்கு உதவுதல், சுபசெலவு, திடீர் பயணம். |
| கும்பம் | தனதானிய சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, காரிய அனுகூலம், மனமகிழ்ச்சி. |
| மீனம் | அதிகாரம், பெரியோரால் மதிக்கப்படல், முயற்சி கைகூடும், இனிய தகவல். |

**வளவன்**

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கல்வியங்காடு | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 120 | 90 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 80 | 90 | 90 |
| தக்காளி | 110 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 45 |
| கோவா | 80 | 90 | 80 |
| கரட் | 140 | 160 | 150 |
| பூசணி | 50 | 60 | 50 |
| புடோல் | 80 | 100 | 65 |
| வாழைக்காய் | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 90 | 100 | 90 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 70 |
| பாகற்காய் | 100 | 120 | 90 |
| வெண்டிக்காய் | 60 | 70 | 60 |
| கரணைக் கிழங்கு | 40 | 50 | 50 |
| பயிற்றங்காய் | 80 | 100 | 135 |
| லீக்ஸ் | 200 | 220 | 120 |
| பீற்றூட் | 70 | 80 | 50 |
| கறிமிளகாய் | 180 | 200 | 130 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 200 |
| போஞ்சி | 150 | 180 | 150 |
| கத்தரிதம்புள்ள | 40 | 50 | 40 |
| கீரை - 1 பிடி | 30 | 35 | 35 |
| தேசிக்காய் | 80 | 100 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 35 |

# யாழ். கல்வி வலய அதிபர்களின் மலையகக் கல்வித் தரிசனம் 07

நுவரெலியா நல்லாயன் பாலிகா மகாவித்தியாலய தரிசிப்பை முடித்துக் கொண்டு அடுத்த பாடசாலைத் தரிசிப்பிற்காக எங்கள் பயணம் தொடர்ந்தது.

பாடசாலைகளின் தரிசிப்பு முடிவடைந்து அடுத்த பாடசாலைக்கான பயணிப்பில் தரிசித்த பாடசாலையின் சிறப்பியல்புகளை-பிள்ளைநேயப் பாடசாலையின் பண்பு விருத்திகளை மீட்கும் பணி பஸ்ஸுக்குள்ளேயே நடந்தேறும்.



பள்ளி மாணவர்கள்

அதிபர்கள் தாம் பார்த்த விடயங்களை மதிப்பீடு செய்வர். இரட்ணசிங்கம் அவர்கள் அவற்றைத் தொகுத்து துலாம்பரப்படுத்துவார்.

இவ்வாறு ஒப்புவிக்கும் நிகழ்வும் (Presentation), வினாக்கொத்துகளை வழங்குவதுமான செயற்பாடுகள், ஓடும் பஸ்ஸில் பரிமாற்றப்பட்டதைப் பார்க்கும் போது, நேரத்தின் உச்சப்பயன்பாடு பற்றிய சிந்தனை உத்வேகம் தந்தது.

இதுபற்றியெல்லாம் கல்வித் தரிசனத்தின் இறுதிப்பாகத்தில் விரிவாக விபரிக்கலாம் என்று எண்ணுகின்றோம்.

மலையகத் தரிசனத்தை வாசிக்கும் எங்கள் யாழ். வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அவர்கள் சில அதிபர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பாடசாலைத் தரிசிப்பு முடிந்தவுடன் கலந்துரையாடல், Presentation என்பன எப்படி நடைபெற்றது என்று விசாரிப்பதாகக் கேள்வி.

ஆம், எல்லாம் சிறப்பாக நடைபெற்றது என்று பதில் கூறிய அதிபர்கள், பயணக் கட்டுரையை கல்விப் பணிப்பாளர் கேள்வி கேட்காத வகையில் எழுதுமாறு என்னிடம் கூறியுள்ளனர்.

ஆதலால், மலையகப் பாடசாலையின் தரிசிப்பில் பாடசாலைகளில் காணப்பட்ட சிறப்பம்சங்களைக் கட்டுரையின் இறுதியில் தொகுத்துத்தரலாம் என்று எண்ணியுள்ளோம்.

இப்போது பஸ் வண்டி நுவரெலியா ஊட்டுவெளி வித்தியாலயத்திற்குச் செல்வதற்காக நிறுத்தப்பட்டது.

ஊட்டுவெளி வித்தியாலயம் மலை உச்சியின் ஒரு சிறு பகுதியில் இயங்குகிறது.

அந்த இடத்திற்கெல்லாம் எங்கள் பஸ் வண்டி செல்ல முடியாது. ஆகையால் நடந்து தான் அங்கு செல்ல வேண்டும். சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்கு நடக்க வேண்டும் என்று சொல்லலாம். அந்த ஒரு கிலோ மீற்றர் தூரம் என்பது தரைப் பாதைக்கு மட்டுமே பொருந்தும். இது மலைப்பாதை. ஏறுவதும் இறங்குவதும் சுற்றிச் சுற்றி வலம் வருவதுமான பாதை வழியே பயணம் தொடர்ந்தது.



மலையின் ஒற்றையடிப் பாதையில் வரவேற்பு நிகழ்வு

எங்கள் பயணக்களைப்பை மலையெங்கும் ஆட்சி புரியும் தேயிலைச் செடிகள் ஆற்றுப்படுத்தி ஆறுதல் தந்தன.

யாழ்ப்பாணத்தில் களைத்துப் போனால் தேநீர் குடிப்போமல்லவா? அங்கு தேயிலைச் செடியைப் பார்த்தாலே போதும் களைப்புப் பறந்து போகும். அந்தளவிற்கு பசுமையின் இனிமை.

அந்த இரசனையோடு ஊட்டுவெளி வித்தியாலயத்திற்குச் சென்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் எங்கள் வருகைக்காக காத்திருந்தனர். பாண்ட் வாத்தியம் முழங்க வரவேற்புத் தரப்பட்டது.

ஐந்தாம் வகுப்பு வரையான அந்தப் பாடசாலைக்கு அயல் பாடசாலையிலிருந்து பாண்ட் இசைக்க மாணவர்கள் வந்திருந்தார்கள்.

அவர்களின் பாண்ட் இசையைத் தொடர்ந்து மாணவர்களின் வரவேற்பு நடனம் இடம்பெற்றது.

தேயிலைத் தோட்டத்தில் மலை யகப் பெண்கள் தேயிலைக் கொழுந்து பறிக்கும் நிஜத்தை அந்த சிறுவர்கள் நடனமாக நடித்துக் காட்டினார்கள்.

அந்த நடனம் மலையத் தமிழர்களின் பரிதாபத்தின் எதிரொலிப்பா? அல்லது நாங்களும் வளர்ந்து இதைத்தான் செய்யப்போகின்றோம் என்பதை உணர்த்தும் அடையாளமா? இந்த புரியாப் புதிர் எங்கள் மனங்களைத் துளைத்துக் கொள்ள பாடசாலைக்குள் நுழைந்தோம். மிகச்சிறிய பாடசாலை. பெருந்தோட்டம் என்ற பெயரை அர்த்தமற்றதாக்கும் சிறிய நிலப்பரப்பு.

சந்திரனில் கல்லெடுத்து செவ்வாயில்

**விதுரன்**

வீடு கட்ட முற்பட்ட விஞ்ஞான உலகில், எங்கள் தமிழினத்திற்கு மட்டும் ஏன் இந்த நிலை!

ஒரு பரப்புக் காணியைக் கூட அதிகரிக்க முடியாத அளவில் பெருந்தோட்ட நிர்வாகம் இறுக்கமாக இருக்கின்றது.

பெருந்தோட்டத்தின் முதுகெலும்பாக இருக்கும் மலையகத் தமிழர்கள் படித்து விட்டால், சிந்திக்க ஆரம்பித்து விட்டால், தங்கள் விலா எலும்புகள் முறிக்கப்பட்டு விடும் என்ற அச்சமே மலையகத் தமிழ் மக்களை நசுக்குவதற்கான காரணம் என்று ஊக்கிக்க முடிந்தது.

மூர்த்தி சிறிது கீர்த்தி பெரிது என்பார்களே அதற்கு ஊட்டுவெளி வித்தியாலயம் நல்ல உதாரணம்.

1903ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை 107 வருடங்களைக் கடந்து நிற்கின்றது. எனினும் கடந்த ஒரு மாதத்திற்கு முன்னரே மலசல கூட வசதிகளும், குடிநீர் விநியோகமும் அரங்கேறியுள்ளன. அந்தப் பாடசாலையின் அதிபர் அரியமுத்து இளைஞர். தகவல் தொழில் நுட்பத்தை முழுமையாக நேசிப்பவர்.

பாடசாலையின் வரலாறு, அதன் சாதனைகள், புலமைப் பரீட்சை பெறுபேறுகள், விழாக்கள் என அத்தனையையும் கணனி மூலமாகக் காட்சிப்படுத்திக் காட்டினார்.

பாடசாலை வளவில் பொருத்தப்பட்ட சோலர்கள் மின்சாரத்தை வழங்க 'பவர்பொயின்ற் பிறசென்ரேசன்' நடைபெற்றது.

அதிபர்கள் திகைத்து விட்டனர். கொழும்புத்துறைக் குடிசையில் தவயோகர் என்ற ஞானகுரு அமைதியாய் இருந்தது போல ஊட்டுவெளி என்ற இடத்தில் உள்ள சிறிய பள்ளியில் இப்படியொரு தகவல் தொழில் நுட்பமெனில் அதற்காக அந்த அதிபரும் அங்கிருக்கும் ஏழு ஆசிரியர்களும் எவ்வளவு பாடுகளை அனுபவித்திருப்பர் என்ற சிந்திப்பே அத்தகையதொரு முடிபுக்கு எங்களை ஆட்படுத்தியது.

பாடசாலையின் வரலாறுகளை அதிபர் காட்சிப்படுத்த மாணவர்களின் வரவேற்புரை, பேச்சுக்கள் என நிகழ்ச்சிகள் அரங்கேறின.



பாடசாலையின் தோற்றம்

ஐந்தாம் தரத்திற்குட்பட்ட அந்தப் பாடசாலை மாணவர்கள் மேடையேறிப் பேசியபோது அவர்களிடம் இருந்த தற்துணிவும் சொல்லாட்சியும் மலையகம் மிகவிரைவில் இந்தியத் தமிழகம் போல அறிஞர்களை-பேச்சாளர்களை உருவாக்கும் என்ற நம்பிக்கை எங்கள் எண்ணங்களில் குடிகொண்டது.

107 வருடங்களின் நிறைவில் அந்தப் பள்ளியை உயர்த்தப்பாடுபடும் அதிபர்,ஆசிரியர்கள், பெற்றோர்களின் முயற்சி நிச்சயம் திருவினையாக்கும் என்ற நம்பிக்கையோடு அந்தப் பாடசாலையின் சுற்றுப் புறங்களை நோட்டமிட்டோம்.

பாடசாலைஅதிபர் அரியமுத்து



## இலங்கைக்கான பயண எச்சரிக்கைகளை ஐரோப்பிய நாடுகள் தளர்த்தியுள்ளன

(கொழும்பு)


இலங்கைக்கான பயண எச்சரிக்கையை ஐரோப்பிய நாடுகள் தளர்த்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் சமாதானமான சூழ்நிலை நிலவி வருவதாகவும் இதனால் கடந்த காலத்தில் பிறப்பிக்கப்பட்ட பயண எச்சரிக்கைகளை நீடிப்பதில் அர்த்தமில்லை எனவும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஐரோப்பிய நாடுகளது இராஜதந்திரிகளுக்கு விளக்கமளித்துள்ளார்.

இதன்படி குறித்த நாடுகளினால் விடுக்கப்பட்டுள்ள பயண எச்சரிக்கைகளை களைவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என இராஜதந்திரிகள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம் உறுதியளித்துள்ளனர்.

எதிர்வரும் நாட்களில் இலங்கை சுற்றுலாத் துறையில் பாரிய அபிவிருத்தியை எதிர்பார்க்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (6)





உலகப் புத்தக தினத்தினை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூல் நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வில் கவிஞர் நாகேஸ்வரனை சந்திரமௌலீச அதிபர் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதனையும் அருகில் சரசாலை உப பணிமனை பெறுப்பதிகாரி திருமதி மாலதி மோகனதாஸ் மற்றும் நூலகர் இ.தர்மலிங்கம் நிற்பதனையும் மாணவர்கள் புத்தகக்கண்காட்சியினை பார்வையிடுவதனையும் படங்களில் காணலாம்.
(படங்கள் :-சாவகச்சேரி நிருபர்)

## அரச வைத்தியசாலைகளில் நிலவும் மருந்துதட்டுப்பாடு தொடர்பாக வாரம்தோறும் ஆராய்வதற்கு நடவடிக்கை

(கொழும்பு)

அரசாங்க வைத்தியசாலைகளில் நில வும் மருந்து தட்டுப்பாடுகள் தொடர்பாக வாரம் தோறும் ஆராய்வதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அவ்வப்போது ஏற்படும் மருந்துத்தட்டுப்பாட்டை நீக்குவதே இதன் நோக்கமாகும்.

மருந்து தட்டுப்பாடு குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவிடம் இதற்கான பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள சகல வைத்தியசாலைகளிலும் நிலவும் மருந்து தட்டுப்பாடு தொடர்பாக இந்த குழுவால் ஆராயப்பட்டு தட்டுப்பாடாக உள்ளதென கண்டறியப்படும் மருந்துகளை உடனடியாக இறக்குமதி செய்யவும் அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது.

இந்த மருந்து வகைகள் கட்டம் கட்டமாக நாட்டுக்கு கொண்டு வரப்படுவதாக சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (6)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியின் வணிக மாணவர் மன்றம் நடத்தும் கணக்கீட்டு மாணவர்களுக்கான கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (6)

## சாந்தபுரம் மக்களில் ஒரு தொகுதியினர் விரைவில் மீள்குடியேற்றப்படவுள்ளனர்

கிளிநொச்சி சாந்தபுரம் பகுதி மக்களில் ஒரு தொகுதியினர் விரைவில் அவர்களுடைய இடங்களில் குடியமர்த்தப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மக்கள் இப்பொழுது கிளிநொச்சி மத்திய கல்லூரியில் அமைந்திருக்கும் இடைத் தங்கல் முகாமில் தங்கவைக்கப்பட்டிருக்கின்றனர்.

மீள்குடியேற்றத்துக்காக இவர்கள் கடந்த மாதம் வவுனியா செட்டிகுளம் நலன்புரி நிலையங்களில் இருந்து அழைத்து வரப்பட்ட போதும் அவர்களுடைய பகுதிகளில் குடியமர்வதற்கு அனுமதிக்கப்படவில்லை. தொடர்ந்தும் கிளிநொச்சி மத்திய கல்லூரியிலே தங்க வைக்கப்பட்டிருக்கின்றனர்.

சொந்த இடத்துக்கு வந்தும் தங்களுடைய வீடுகளுக்குச் செல்ல முடியாமல் மீண்டும் தாங்கள் முகாமிலே தடுத்து வைக்கப்பட்டிருப்பது பெரும் பாதிப்புகளையும் கவலைகளையும் தருவதாகத் தெரிவித்த அவர்கள் விரைவில் தங்களுடைய வீடுகளுக்குச் செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து உதவும் படி நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிபர், படைஅதிகாரிகள் ஆகியோரைக் கேட்டிருந்தனர்.

இதனை அடுத்து இப்போது சாந்தபுரம் பகுதியைச் சேர்ந்த மக்களில் ஒரு தொகுதியினரை அந்தப் பகுதியில் மீள் குடியேற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதி மக்கள் விவசாயத்தையும் இரணைமடுக்குளத்தில் நன்னீர் மீன்பிடியையும் தமது வாழ்வாதாரத் தொழிலாகக் கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (6)


Patrician Institute

G TEC COMPUTER EDUCATION

கணனி துறையில் சர்வதேச சான்றிதழ் இல்லையா?

இனியும் கவலை வேண்டாம்

G- Tec Computer Education நிறுவனத்தின் ஆதரவில் Patrician Institute ல் கல்வி பயில ஓர் அரிய வாய்ப்பு

பயிற்சி ஆரம்பம் 07.06.2010 நேரம் மாலை 3.00 -5.00 மணி வரை (கிழமை நாட்களில்)

- ***MS OFFICE & E.Mail ,Internet*** கற்கை
- ***ISO 9001- 2008*** சர்வதேச சான்றிதழ்
- பாடசாலை மாணவர்களுக்கு மிகவும் ஏற்றது.
- அரச, அரச சார்பற்ற, தனியார் துறை ஊழியர்கள், வீட்டுமனையாளர்கள், ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் அனைவருக் கும் ஏற்றது.
- கட்டணம் ***7000/=*** பதிலாக ***1600/=*** மட்டும்
- 1500/= பெறுமதியான இலவச பாடப்புத்தகம்
- மிக குறுகிய காலம் மட்டும்
- 10 வயது முதல் கற்கலாம்
- லப்டொப் கணனி வெல்லுவதற்கான வாய்ப்புகள்



மேலதிக தகவல்களுக்கு:
பதிவாளர்,
**Patrician Institute**
61,St Patricks Road, Jaffna.
T. P. 2226148

(சு/344)


## அமலோற்பவ மாதா ஆலயப்பெருவிழா

ஒட்டகப்புலம் புனித அமலோற்பவ மாதா ஆலயப் பெருவிழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு விழா திருப்பலியுடன் ஆரம்பமாகவுள்ளது.

இவ்விழாவிற்கு செல்லவிரும்புவோரை இன்று காலை 7 மணிக்கு சுண்டுக்குளி புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலய முன்றலில் ஒன்று கூடுமாறு கேட்கப்படுகிறது.

கடந்த ஆறு அண்டுகளுக்குப் பின் இத்திருவிழா நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (6)

## இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி

(கொழும்பு)

இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அதிக உதவிகளை வழங்கப்போவதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் தெரிவித்துள்ளார். இலங்கைக்கு மூன்று நாள் விஜயம் மேற் கொண்ட அதன் தலைவர் ஹருகிகோ குரு டோ தெரிவிக்கையில்,

ஆசிய அபிவிருத்தி வங்கி 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளுக்கான உதவித் தொகையாக 450 தொடக்கம் 500 மில்லியன் டொலர்களை வழங்க முன்வந்துள்ளது. அவசர நிதி உதவியாக 150 மில்லியன் டொலர்களை அது வழங்கியுள்ளது.

எமது உதவிகளில் 60 விகிதமானவை வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளுக்கான அபிவிருத்திகளுக்கு வழங்கப்படும். இந்த வருடம் நாம் 212 மில்லியன் டொலர்களை வழங்கியுள்ளோம்.

எமது வங்கி இலங்கையின் நிதி முகாமைத்துவத்திற்கு அதிக ஆதரவுகளை வழங்கும் இலங்கையின் வரவு செலவுத்திட்ட துண்டு விழும் தொகை 10 விகிதமாக உள்ளது. இது மிக அதிகமானது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6)

# அனைவரது கவனத்தையும் ஈர்த்த 'துளிரும் நம்பிக்கை' உயிர்ப்பின் நிகழ்வு

கல்விப் புலத்தில் மட்டுமன்றி கலை, இலக்கிய சமூக சமய விளையாட்டு தொழில் நுட்ப புலங்களிலும் மாணவர்களை இட்டுச் சென்று உயர்நிலைக்கு ஆற்றுப்படுத்துவதில் கல்விச் சாலைகள் முன்னின்று உழைக் கின்றன என்பதற்கு பல கல்விச் சாலைகள் காணப்படுகின்றன போதிலும் வட்டு. யாழ்ப் பாணக் கல்லூரி ஒருபடி முன்னிலையில் நின்று உழைக்கின்றது என்பது மிகை யல்ல.

இவ்வகையில் சாதனை படைத்து வரும் இக்கல்லூரி அண்மையில் நிகழ்த்திய துளிரும் நம்பிக்கை என்றமைந்த உயிர்ப் பின் நிகழ்வு எல்லோரினதும் கவனத்தை ஈர்த்திருக்கின்றது.

**சகல துறைகளிலும் ஓங்கி வளர்ந்து கிளைகள் பரப்பி விழுதுகள் வீசி மிளிர்ந்து தன்னிகரற்ற சாதனைகளை நிகழ்த்தி மிடுக்கோடு நிமிர்ந்து நிற்கின்றது யாழ்ப்பாணக் கல்லூரி பெருமரம்.**

கல்லூரி முதல்வரும் கலை, இலக்கிய சமய சமூக ஆவர்வலருமான நோயல் அ. விமலேந்திரன் அவர்களின் தலைமையில் உதித்த ''உயிர்ப்பின் நிகழ்வுகள்'' நன்கு கட்டமைக்கப்பட்ட கலைத் திரள்களின் ஊடான வெளிப்பேறுகள் என்பதை வெளிப்ப டுத்தி நிற்கின்றது.

தலைமையுரையில் முதல்வரின் கருத் துக்கள் கிறிஸ்தவர்களுக்கு மட்டுமன்றி இந்துமத சகோதரர் மறை உண்மைகளை நன்கு விளக்குவதாய் அமைந்திருந்தது.

மன்னிப்பு, விட்டுக்கொடுப்பு, ஏற்றுக் கொள்ளுதல், தன்னிலை உணர்தல் என்ப வற்றின் ஆழ்ந்த கருத்துக்களை அவர் தன்னு ரையில் முதன்மைப்படுத்தி தலைமை யுரையினை நிகழ்த்தினார்.

அந்நிகழ்வினைத் தொடர்ந்து கல்லூரி ஆசிரியை திருமதி இவாஞ்சலீன் ஜெயராஜன் அவர்களின் இயக்கத்தில் அமைந்திருந்த இசை, ஆராதனை இனிமையையும் இறை பக்தியையும் ஏற்படுத்தின. மாணவ மாணவி களின் இனிமையான குரல் எல்லோரையும் கவர்ந்தது. ''உயிர்ப்பின் கீதங்கள்'' உள்ளங் களில் உவகையை ஏற்படுத்தியது.

அந்த நிகழ்வினைத் தொடர்ந்து உயிர்ப் பின் மையநிகழ்வான பாடுகளின் காட்சி, பக்தி, இசை, உரை, நடன, நாடகம் கல்லூரியின் துணை முதல்வரும் யாழ்ப்பாணக் கல்லூரி யின் நாடகத் துறையில் தன்னை முற்று முழு தாக அர்ப்பணித்து சாதனை படைப்பவரு மாகிய ஏ.சி.பிரான்சிஸ்சின் நெறியாளு கையில் மேடையேறியது.

நாடகம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது ஆச்சரியம் வந்து தானாக எம்மோடு ஒட்டிக் கொண்டது. காரணம் நாடகத்தில் பங்குபற்றிய அனைவரும் மாணவர்களே என்ற செய்தி. பல காலங்களாக தம்மை நாட கத்தில் ஈடுபடுத்திய அனுபவம் கொண்டவர் களைப் போல அவர்கள் நடித்தமை மிகவும் வியப்பினை ஏற்படுத்தி நின்றது.

சுமார் இருநூற்றிற்கு மேற்பட்ட மாணவர் களின் கூட்டமைப்புடன் வெற்றிகரமான வெளியீட்டினைப் பெறுவதில் நெறியாளர் வெற்றியீட்டியுள்ளமை மிகப் பெரிய சாதனை. நாடகத்தில் தலைமைக்குரு பாத்திரமேற்ற மாணவன் செல்வன் சுபாசின் நடிப்பு எல்லோ ரையும் வெகுவாகக் கவர்ந்தது.

நாடகத்தின் வசனங்கள் மிகவும் உணர்ச்சி கரமாகவும் ரசிக்கும் படியாகவும் அமைந்தி ருந்தன. பிலாத்துவும் தலைமைக்குருவும் வினாவிடை போல் வாதாடிய வசனங்கள் உயர்தரமாக அமைந்திருந்தன.

**ஜே.ம.ஜோஷப்மேரி**
**ஆசிரியர்**

அதுமட்டுமன்றி மேடை விதானிப்பு, ஒளி விதானிப்பு, வேட உடை, ஒப்பனை யாவும் நெறியாளரினாலேயே கையாளப்பட்டிருந்தன.

அத்தோடு நாடகத்தின் இடையே இடம் பெற்ற நடனங்கள் மிகவும் தனிச் சிறப்பு டையனவாகக் காணப்பட்டன. கல்லூரி ஆசிரிய ஆளணியுடன் இணைந்த பாடல்க ளும் மிகவும் நயம் செறிந்தவையாக அமைந் திருந்தன. சப்தமி கலையக சத்தியனின் இசையும் சிறப்பாக அமைந்திருந்தது.

**பயிற்றப்பட்ட கலைஞர்களூடாக காலாதி காலமாக இக்கலை படைப்பை ஆற்றும் நிறுவனங்களை அண்மித்த நிலையில் இந்நாடகம் அமைந்தமை குறிப்பிடத்தக்கது.**

ஆக கதை, வசனம், ஒளி, ஒப்பனை வேடஉடை என்ற எல்லாவற்றினையும் ஆசிரி யர்ககள் மாணவர்களினூடாக வெளிக் கொணர்ந்து தனது கலைப் புலமைக்கு சான் றாக்கி மேலும் ஒரு படிக்கல் உயர்ந்து நிமிர்ந்து நிற்கின்றார். துணை முதல்வரும் நெறியா[illegible] ருமாகிய ஏ.சி.பிரான்சிஸ் இப்படியாக ந[illegible] பார்க்கின்ற போது இறைவனின் அருள் வ[illegible] காட்டலும் கல்லூரி முதல்வரின் தலைமை[illegible] யாலும் இக் கல்லூரி இன்று வெற்றிச சிகரத்தை நோக்கி வீறுநடை போட்டுக் கொண்டிருக்கிறது. கலைத்துறையினில் கால்பதித்து இறை விழுமியங்களுக்கூடாக இன்னும் பெருமரமாகும் என்ற நம்பிக்கை துளிர்கின்றது.

## வேலணையில் பனை உற்பத்தி விற்பனை நிலையம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

வேலணை மேற்கு பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திற் கான புதிய விற்பனை நிலையமொன்று கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப் பட்டது.

உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் முகமாக இந்த விற்பனை நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

விற்பனை நிலையத்தை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு கைத் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் திறந்து வைத்தனர்.

அங்கு பனம் வெல்லம், புழுக்கொடியல், பனை ஓலையால் உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்தி உள்ளிட்ட பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. (6)

## கண்ணிவெடி அகற்றப்படும் வரை முல்லைத்தீவில் மீள்குடியேற்றமில்லை

### அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து வவுனியா அகதிமுகாம்களிலுள்ள முல்லைத் தீவு மாவட்ட மக்களை உடனடியாக அவர் களது சொந்த இடங்களில் குடியேற்றமுடியாது. அந்த மாவட்டத்தில் புதைக்கப்பட்டுள்ள அனை த்து கண்ணிவெடிகளும் அகற்றப்பட்டமை தொடர்பில் உத்தியோகபூர்வமாக அறிக்கை சமர்பிக்கப்பட்ட பின்னரே அவர்களை மீளக் குடியேற்றமுடியும் என மீள்குடியேற்ற அமை ச்சர் மில்ரோய் பெர்னாண்டோ தெரிவித் துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் விடுதலைப்புலிகள் பாரியளவில் கண்ணிவெடிகளைப் புதைத்து வைத்திருக்கின்றனர். இவற்றைஅகற்றும் பணிகள் துரிதமாக இடம் பெற்று வருகின்றன.

முள்ளிவாய்க்கால் பிரதேசத்திலேயே அதிகளவில் கண்ணிவெடிகள் புதைத்து வைக்கப்பட்டுள்ளமை இப்போது தெரிய வந் துள்ளது. இருப்பினும்அந்த மாவட்டத்தில் கண்ணிவெடிகள் முழுமையாக அகற்றப்பட் டமை தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பிலிருந்து உத்தியோகபூர்வமான அறிக்கை எமக்குக் கிடைத்த பின்னரே அகதிமுகாம்களிலுள்ள முல்லைத்தீவு மாவட்ட மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியேற்ற முடியும்.

இதற்கு இன்னும் ஒரு மாத காலமேனும் தேவைப்படலாம்.

வவுனியாவிலுள்ளஆறுநலன்புரிவலயங்களில் ஒன்றினை இன்னும் இரண்டொரு தினங்க ளில் நாம் மூடவுள்ளோம். மீதியாக ஐந்து வலயங்களே உள்ளன. இவற்றில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களில் பெரும்பாலானோர் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களே. இவர்கள் அ[illegible] வரையும் குடியேற்றிய பின்னர் இந்த வல யங்களையும் மூடக்கூடியதாகவிருக்கும்.

மீள்குடியேற்றப்படும் மக்களுக்கு வழங்கப் படும் கூரைத் தகடுகள் இந்தியாவிலிருந்தே எமக்குக் கிடைக்கின்றன. கூரைத் தகடுகளை ஏற்றிய கப்பல்கள் இந்தியாவிலிருந்து கொழும்பை வந்தடைந்ததும் அவற்றினை மீள்குடியேற்றப் பட்ட மக்களுக்குத் துரிதமாக வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அந்தந்தப் பிரதேச செயலகங்கள் ஊடாக கிராம சேவகரிடம் இவை ஒப்படைக்கப்பட்டு மீள்குடியேறிய மக்களுக்கு வழங்கப்படும். மேலும் கடந்த காலங்களில் மீள்குடியேற்றப் பட்ட மக்களுக்கு உலக உணவுத் திட்டத்தின் உதவியுடனேயே அரசாங்கம் ஆறுமாத காலத் துக்கான நிவாரணங்களை வழங்கி வருகிறது.

இவைமுடிவுறும் நிலையிலிருந்தாலும் அவற்றினைத் தொடர்ந்து வழங்குவது குறித்து உலக உணவுத் திட்டத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். பெரும்பாலும் இது சாத்தியப்படும் எனவும் கூறினார். (6)



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சுதேச விளையாட்டுப் போட்டி நிகழ்வில் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் மங்கல விளக்கேற்றுவதையும், அருகில் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா நிற்பதையும் படத்தில் காணலாம்.

## மூன்று நாட்களில் கிழக்கில் 7பேர் கைது

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் ஏழு தமிழ் இளைஞர்கள் அவசரகால தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

கிழக்கு மாவட்டங்களான மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் விஷேட அதிர டிப்படையினர் தொடரான சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார்கள்.


கடந்த மூன்று நாட்களில் மட்டக்களப் பில் ஐவரும் அம்பாறையில் இருவருமாக ஏழு பேர் விஷேட அதிரடிப் படையினரால் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ்க் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள் ளார்கள்.

இவர்கள் மீது கையடக்க தொலை பேசியில் விடுதலைப்புலிகளின் பாடல்கள் வைத்திருந்தார்கள் என்று குற்றம் சுமத்தப்பட் டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# புலிகள் மீதான இந்தியாவின் தடை ஓர் முன்னெச்சரிக்கை நடவடிக்கை

## ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய தெரிவிப்பு

(கொழும்பு)



தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான இந்தியாவின் தடை ஓர் முன் எச்சரிக்கை நடவடிக்கையாக நோக்கப்பட வேண்டுமென ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்ததுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு மீண்டும் தலை தூக்க சந்தர்ப்பம் அளிக்கப்படமாட்டாது ,எனவும் புலிகளை அரச படையினர் முற்றாக இல்லாதொழித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் சில புலி ஆதரவு நடவடிக்கைகளின் அடிப்படையில் இந்திய அரசாங்கம் புலிகள் மீதான தடையை நீடித்துள்ளது.

பெரிய நாடு என்ற காரணத்தினால் சகல மாநிலங்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய கடமை இந்தியாவிடம் காணப்படுகின்றது.

எனினும் விடுதலைப்புலிகளினால் அச்சுறுத்தல் ஏற்படக் கூடிய வாய்ப்பு இல்லை எனவும் முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (6)

# கொழும்பில் திட்டமிட்டபடி சர்வேதச இந்திய திரைப்படவிழா

## ஏற்பாட்டுக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச இந்திய திரைப்பட விழா திட்டமிட்டபடி கொழும்பில் நடைபெறும் என விழா ஏற்பாட்டுக்குழுவான விஸ்கிராப்ட்டின் பணிப்பாளர்களில் ஒருவரான சபாஸ் ஜோசப் தெரிவித்தார்.

எக்காரணத்தைக் கொண்டும் திரைப்பட விழா இடமாற்றம் செய்யப்படமாட்டாது எனவும் அவர் கூறினார்.

அடுத்த மாதம் 3 ஆம் திகதி முதல் 5ஆம் திகதி வரையில் சர்வதேச இந்திய திரைப்பட விழா நடைபெறும் எனவும் சபாஸ் ஜோசப் குறிப்பிட்டார்.

தமிழக திரைப்படத் துறையினரின் அழுத்தம் காரணமாக திரைப்பட விழாவினை வேறொரு இடத்திற்கு இடமாற்றம் செய்ய தீர்மானித்திருப்பதாக வெளியான செய்தியில் உண்மையில்லை என்பதை மறுத்துள்ள அவர் எந்தவிதமான அழுத்தங்களும் பிரயோகிக்கப்படவில்லை எனவும் தெரிவித்தார். (6)

# இடம்பெயர் மக்களுக்கான உணவு வழங்கலில் உலக உணவுத்திட்டமே பெரும்பங்காற்றுகிறது

(கொழும்பு)

வன்னி இடம்பெயர்ந்த மக்களுக்கு உலக உணவுத் திட்டமே அதிகளவு உணவு களை விநியோகம் செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வறிய மற்றும் யுத் தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு விநியோகம் செய்யும் நடவடிக்கைகளின் போது இலங்கை அரசாங்கம் உலக உணவுத் திட்டத்தில் பெரிதும் தங்கியிருப் பதாக ஆய்வுத் தகவல் ஒன்று சுட்டிக் காட்டியுள்ளது.

பாரிய அபிவிருத்திட்டங்கள் தொடர்பில் அரசியல்வாதிகளும் அதிகாரியும் பிரசாரம் செய்து வருகின்ற போதி,இன்னமும் வறிய மக்களுக்கு உரிய போசாக்கான உணவு விநியோகத்தை மேற்கொள்வதில் இலங்கை சிக்கல் நிலைமையை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக வடக்கு-கிழக்கு வாழும் சி[illegible], சிறுமியருக்கு போசாக்கான உணவுகளை வழங்குவதற்கு அரசாங்கத்தினால் முடியவில்லை எனக் குறிப்பிடப்படுகிறது.

2009ஆம் ஆண்டில் மட்டும் 1.2 மில்லியன் இலங்கை மக்களுக்கு உலக உணவுத் திட்டம் உதவிகளை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உலக உணவுத்திட்டம் மற்றும் ஹெக்டர் கொப்பாகடுவ விவசாய பயிற்சி நிறுவகம் ஆகியவற்றினால் நடத்தப்பட்ட ஆய்வுகளின் மூலம் இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள் ளன.

யுத்த காரணமாக இடம்பெயர்ந்து தற்போது மீள் குடியேற்றப்பட்டுள்ள பல குடும்பங்கள் உணவுப் பற்றாக்குறையை எதிர்நோக்கிவருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி போன்ற பிரதேசங்களில் ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

மீள் குடியேற்றப்பட்டவர்களில் பெரும் பான்மையானவர்கள் எதிர் வரும்பெரும்போகம் வரையிலும் ணவு தட்டுப்பாட்டினால் அவதியுறலாம் என எச்சரிக்கை விடுக் கப்பட்டுள்ளது. (6)


உங்களை உணருங்கள் "ஜெய்குருதேவ்" அன்பில் மலருங்கள்



ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அவர்களின்

THE ART OF LIVING

வாழும் கலை பயிற்சி

உலகில் 182 நாடுகளுக்கு மேல் வெற்றிகரமாக பயிற்றப்படும் வாழும் கலைப்பயற்சி மீண்டும் நமது இடத்தில் ஆரம்பமாகிறது.

- சுதர்சனக்கிரியா, மூச்சுப்பயற்சி, தியானம், எளிய யோகா ஆகி யவை உள்ளடக்கிய அற்புதமான பயிற்சி
- ஞாபகசக்தி அதிகரிக்க
- நிகழ்காலத்தில் வாழ
- மனதை ஒரு நிலைப்படுத்த
- வேலைகளில் முழுக்கவனம் செலுத்த
- ஆஸ்மா, இரத்தக்கொதிப்பு, நீரிழிவு நோய்களில் இருந்து விடுபட

இதில் கலந்து கொண்டு பயன்பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அறிமுக உரை

இடம்:வடிவேலர் மணிமண்டபம், அல்லையம்பதி, துன்னாலை.
காலம்: 31.05.2010 (திங்கட்கிழமை)
நேரம்: மாலை 5.00 மணிக்கு

பயிற்சி நாட்கள்: 01.06.2010 (செவ்வாய்க்கிழமை) முதல் 06.06.2010 (ஞாயிற்றுக்கிழமை) வரை

மேலதிக விபரங்களுக்கு : வாழும் கலைக் குடும்பம்.
T.P.: 077 0474757


# 31.05.2010 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

### நிகழ்வுகள்

- 1223- செங்கிஸ்கானின் மங்கோலியப் படைகள் கிப்சாக்கியரை சமரில் தோற்கடித்தனர்
- 1889- பென்சில்வேனியாவில் ஜோன்ஸ்டவுன் நகரில் அணைக்கட்டு ஒன்று உடைந்ததில் 2ஆயிரத்து 200 பேர் கொல்லப்பட்டனர்.
- 1900- பிரித்தானியப் படைகள் ரொபேர்ட் பிரபு தலைமையில் ஜோகார்னஸ்பேக் நகரைக் கைப்பற்றின.
- 1902 - தென்னாபிரிக்காவில் இரண்டாவது போவர் போர் முடிவுற்றது. தென்னாபிரிக்கா பிரித்தானியாவின் முழுமையான ஆட்சியின் கீழ் வந்தது.
- 1910 - தென்னாபிரிக்க ஒன்றியம் அமைக்கப்பட்டது.
- 1911 - டைட்டானிக் கப்பல் வெள்ளோட்டம் விடப்பட்டது.
- 1921 - ஐக்கிய அமெரிக்காவில் ஒக்லஹோமா துல்சா என்ற இடத்தில் இடம்பெற்ற இனக்கலவரங்களின் போது 39 பேர் கொல்லப்பட்டனர்.
- 1931 - பாகிஸ்தானின் குவெட்டா என்ற இடத்தில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானிய கடற்படையின் நீர்மூழ்கிக் கப்பல்கள் சிட்னி நகரைத் தாக்கின.
- 1961 - தென்னாபிரிக்கா பொதுநலவாய அமைப்பில் இருந்து விலகியது. தென்னாபிரிக்கக் குடியரசு அமைக்கப்பட்டது.
- 1962 - மேற்கிந்தியத் தீவுகளின் கூட்டமைப்பு கலைக்கப்பட்டது.
- 1970 - பெருவில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் யூங்கோ என்ற நகர் முழுமையாகப் புதையுண்டதில் 47 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.
- 1997 - கனடாவில் நியூ பிரன்ஸ்விக்கையும் பிரின்ஸ் எட்வர்ட் தீவையும் இணைக்கும் கூட்டமைப்புப் பாலம் (Confederation Bridge) திறக்கப்பட்டது.
- 2005 - இலங்கையின் புலனாய்வுத்துறை உயர் அதிகாரி மேஜர் நிசாம் முத்தாலிப் கொழும்பில் சுட்டுக்கொல்லப்பட்டார்.
- 2007 - டொராண்டோ தமிழியல் மாநாடு ஆரம்பமானது.

### பிறப்புகள்


- 1048 - ஓமர்கையாம் பேர்சிய மெய்யியலாளர் (இ.1131)
- 1911 - கே.சி.எஸ்.பணிக்கர் தமிழ்நாட்டைச சேர்ந்த ஓவியர் (இ.1977)
- 1931 - நீலவாணன் ஈழத்துக் கவிஞர் (இ.1975)

### இறப்புகள்

- 1809 - ஜோசப் ஹேடன் மேற்கத்திய இசையறிஞர் (பி.1732)
- 1832 - கால்வா பிரெஞ்சு கணிதவியலர் (பி.1811)
- 1987 - ஜான் ஆபிரகாம் திரைப்பட இயக்குநர் (பி.1937)
- 2004 - ஐயாத்துரை நடேசன் ஈழத்துப் பத்திரிகையாளர்

### சிறப்பு நாள்

புகையிலை எதிர்ப்பு நாள்



2004 - வீரகேசரி பத்திரிகை நிருபரும் பத்திரிகையாளருமான ஐயாத்துரை நடேசன் மட்டக்களப்பில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

1981 - கறைபடிந்த இரவு - யாழ்ப்பாணம் பொது நூலகம் நள்ளிரவு நேரம் இலங்கை பொலிஸாரினால் எரிக்கப்பட்டது.



# உடல் நலனுக்கு கேடு விளைவிக்கும் புகைப்பழக்கம்

## இன்று புகைப்பொருள் எதிர்ப்பு தினமாகும்

இன்று உலக நாடுகளில் மக்கள் சமுதாயம் என்றுமில்லாதவாறு புகைப்பொருள் பாவனைக்கு அடிமையாகிக் கொண்டு வருகிறது.

ஏழை, பணக்காரன், சிறுவர், முதியவர், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற பாகுபாடு இல்லாமல் எல்லோரையும் இந்தப் புகைப் பழக்கம் விட்டு வைப்பதில்லை.

உலகளாவிய ரீதியில் புகைத்தல் பழக்கம் மனித வர்க்கத்துக்கு கேடு விளைவிக்கும் காரணியாக இருக்கிறது. இந்தப் பழக்கத்தால் உலகில் ஆண்டு தோறும் 120 கோடிக்கு மேல் புகைக்கு அடிமையாகின்றார்கள். இதனால் ஒரு வருடத்தில் 10 இலட்சத்திற்கு மேல் மரணத்தை தழுவிக்கொள்கின் றார்கள்.

எமது நாட்டில் 24 சதவீதமான மாணவர்கள் புகைத்தல் பழக்கங்களில் ஈடுபடுகின்றார்கள் என்ற அதிர்ச்சியூட்டும் தகவலின் மூலம் தெரிய வந்துள்ளது. புகைப்பிடிப்பதால் இலங்கையில் ஏற்படும் உயிரிழப்புக்களின் எண்ணிக்கை வருடாந்தம் 15 ஆயிரத்திற்கு மேல் என்று அறிய முடிகின்றது. மாணவ சமூகத்தின் கால் பங்கு தொகையினர் புகைத்தலுக்கு அடிமையாவதற்கு பொறுப்பாளிகள் யார் என்ற கேள்வி எழுந்துள்ளது. இவர்கள் புகைப்பிடிப்பதற்கு பணம் எங்கிருந்து கிடைக்கின்றது / பெற்றோர் தமது பிள்ளைகளை கவனிப்பதில்லையா? ஆசிரியர்கள் கவனிப்பதில்லையா? என்பதே இங்கு முக்கியமாக எடுக்கப்படும் கேள்விகளாகும்.

எமது நாட்டைப்பொறுத்தமட்டில் வருடம் தோறும் 22 ஆயிரத்திற்கு மேல் மரணத்தை தழுவிக்கொள்கின்றார்கள். மேலும் இலங்கையில் 12 வயதிற்கு மேற்பட்ட ஆண்களில் 55 சதவீதத்தினர் புகைப்பழக்கம் உடையவர்கள். புகைத்தல் காரணமாக 50 சதவீதமானவர்கள் இருதய நோயினாலும் 40 சதவீதமானவர்கள் புற்று நோயினாலும் மரணிக்கின்றார்கள். இத்துடன் புகைப்பழக்கம் உடைய ஒருவருக்கு பிறக்கும் குழந்தைக்கு 40 சதவீதம் புற்றுநோய் வர வாய்ப்புண்டு.

ஒரு நாளைக்கு 10 சிகரட்டை புகைப்பவன் ஒரு நாளைக்கு 11 நிமிட ஆயுளைக் குறைக்கின்றான்.

சிகரட் பிடித்தல் உடல் நலத்திற்கு கேடு என்பது தெரிந்த விடயம் தான். ஆனால் புகைப்பவர் அருகில் இருப்பவரின் கண் பார்வைக்கும் கேடுவிளைவிக்கும். முகத்திற்கு நேராக புகைப்பது கேடுவிளைவிக்கும் என்று பலரும் அறிந்தாலும் உங்கள் நண்பரோ குடும்பத்தினரோ அருகில் இருந்து புகையை சுவாசித்தால் விழித்திரையின் மையப்பகுதி பாதிக்கப்படும். மேலும் உங்களுடைய படிக்கும் திறன் பாதிப்பதோடு பார்வை சம்மந்தமான குறைபாடுகளும் ஏற்படும். ஆகவே நீங்கள் புகைப்பிடிக்கா விட்டாலும் உங்கள் அருகில் இருப்பவர் புகைத்தால் தீமை இருவரது கண்களுக்கும் தான். மேலும் புகைப்பிடிப்பவர்களுக்கு பக்கத்தில் சிறுவர் இருந்தால் சிறுவர்களின் மூளை வளர்ச்சி குன்றும். எனவே நீங்கள் சற்றுத் தள்ளியே நில்லுங்கள். புகைப்பவரிடம் புகைப்பிடிப் பதை நிறுத்துங்கள். நிறைய நன்மை கிடைக் கும் என்று மருத்துவ உலகம் அவ்வப்போது கூறுகின்றது. இருந்த போதிலும் புகைப்பிடிப் போரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் கூடுகின்றதே தவிர குறையவில்லை. இந்நிலையில் சிகரட் பிடிப்பதை நிறுத்தினால் சத்திர சிகிச்சைக்குப் பிறகு வரும் புண் விரைவில் குணமாகும் என்று ஆய்வில் தெரிய வந்துள்ளது.

புகைப் பிடித்தவர்களுக்கு புண் குணமாக நாட் செல்லும். மேலும் புகைப்பிடிப்பதைத் தவிர்த்தால் கீழ் கண்ட ஆபத்திலிருந்து தப்பித்துக்கொள்ளலாம் என்று மருத்துவ உலகம் கூறுகின்றது. மாரடைப்பு ஏற்படும் அபாயம் குறைதல், இரத்தத்தில் கொலஸ்ரோல் குறைதல், நுரையீரல் பாதிப்புக்குறைதல், இருமல் கட்டுக்குள் வருதல், நுரையீரல் புற்று நோய்க்கான வாய்ப்புக்குறைதல், இரத்தத்தில் புற்று நோய்க்கான வாய்ப்புக் குறைதல், இரத்தத்தில் கார்பன்மோனாக்சைடு நீங்குதல், உணவின் சுவையினை அறிதல் மற்றும் வாயிற்றுக் குடல்புண் நீங்குதல் போன்ற பல்வேறு நன்மைகளை புகைப்பிடித்தலை நிறுத்துவதன் மூலம் கிடைக்கப்பெறுகின்றது.

**புகைத்தலை விட சில அறிவுறுத்தல்கள்**

✠ கொஞ்ச நாட்களுக்கு புகைப்பிடிக்கும் நண்பர்களை விட்டு விலகி இருக்க வேண்டும். இதனால் புகைப்பிடிக்கும் ஆசை குறையும். அந்தப் பழக்கத்தை மீண்டும் ஆரம்பிக்கக் கூடாது என்ற எண்ணம்.

✠ புகைப்பிடிப்பதை எதிர்த்து தீவிரமாக பிரசாரம் செய்ய ஆரம்பித்திட வேண்டும். அது அடுத்தவர்களுக்கு உபயோகம். உங்கள் உள்ளுணர்வைத் தூண்டும். உங்களை உறுதி கொள்ள வைக்கும்.

✠ தினமும் இரண்டு தடவை குளிர்ந்த நீரில் குளிக்க வேண்டும்.

✠ உடற்பயிற்சிகள் செய்ய வேண்டும், மூச்சு வாங்குவது போன்ற பயிற்சிகளே நல்லது. பிராணாயாமம் என்ற மூச்சுப்பயிற்சி மிகவும் நல்லது.

✠ சாப்பாடு மிதமாக இருக்க வேண்டும், சீராக இருக்க வேண்டும், பச்சைக்காய்கறிகள் பழங்கள் சாப்பாட்டில் சேர்த்துக்கொள்ளலாம். அடிக்கடி கொஞ்சம் கொஞ்சமாக சாப்பிட்டு இரத்தத்தில் சர்க்கரையின் அளவை பராமரிக்க வேண்டும். இது நரம்புகளை அமைதிப்படுத்தும்.

✠ நீண்ட நேரம் பசியோடு இருக்கக் கூடாது, புகைப்பிடிப்பதை நிறுத்த முயற்சி செய்யும் போது எடை குறைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது.

✠ தேநீர், மதுபானம், போதைப்பொருள் கலந்த உணவு இவையெல்லாம் புகைப் பிடிப்பதை ஊக்கப்படுத்தும். கடுகு மிளகு போன்ற காரமான பொருட்களைத் தவிர்க்க வேண்டும். உப்பின் அளவை குறைக்க வேண்டும். தினமும் பத்து குவளை தண்ணீராவது



குடிக்க வேண்டும். வெறும் நீர் புகைப்பிடிக்கும் ஆவலைத் தணிக்கும்.

✠ கையில் சிகரட், புகையிலை ஏதாவது இருந்தால் உடனே தூக்கி எறிந்து விடுங்கள். அது கையில் இருக்கும் வரை புகைப்பிடிக்கும் ஆசை வந்துகொண்டே இருக்கும்.

✠ இறை நம்பிக்கை உள்ளவர்கள் புகைப்பிடிக்கும் எண்ணம் வரும்போது பிரார்த்தனை செய்யலாம்.

✠ உங்களுக்கு மிகவும் வேண்டப்படுபவர்களிடம் நீங்கள் புகைப்பிடிப்பதை நிறுத்தி விட்டதாகச் சொல்லுங்கள்.

நோயற்ற வாழ்வே உலகின் சிறந்த சுகம். சுகத்தைப் பெறவேண்டுமாயின் தீய பழக்கமான புகைத்தலை விட்டு சுக தேகியாக மக்கள் வாழ வேண்டுமென்று இந்நாளில் வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினர் கேட்டுக்கொள்கின்றார்கள்.

**செ.குமாரசிங்கம்**
செயலாளர்,
வடபிரதேச நல்லொழுக்க
சம்மேளனம்.

# அம்பாந்தோட்டையில் தூதரக அலுவலகமொன்றை திறப்பதற்கு இந்தியா திட்டம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் தனது தூதரகத்தின் அலுவலகம் ஒன்றை திறந்துள்ள இந்தியா தற்போது அம்பாந்தோட்டை பகுதியில் மேலும் ஒரு அலுவலகத்தை திறப்பதற்கு திட்டமிட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இலங்கையில் தனது ஆளுமைகளை அதிகரிக்கும் முயற்சிகளை இந்தியா மெல்ல மெல்ல அதிகரித்து வருகின்றது. முதலில் யாழ்ப்பாணத்தில் தனது தூதரகத்தின் அலுவலகம் ஒன்றை திறந்துள்ள இந்தியா தற்போது அம்பாந்தோட்டை பகுதியில் மேலும் ஒரு அலுவலகத்தை திறப்பதற்கு அனுமதி கோரியுள்ளது.

அடுத்த மாதம் இந்தியா செல்லவுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இந்திய பிரதமர் இது தொடர்பில் கலந்துரையாடவுள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

மகிந்த ராஜபக்ஷவின் விஜயத்திற்கு முன்னர் இந்தியா சென்று நிலைமைகளை சீர் செய்ய பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். ஆனால் அவரின் விஜயத்திற்கு முன்னர் இந்தியா தனது நிபந்தனைகள் அடங்கிய பட்டியல் ஒன்றை இலங்கை அரசிடம் சமர்ப்பித்திருந்தது.

அதனை தொடர்ந்து பசில் ராஜபக்ஷவின் விஜயம் நிறுத்தப்பட்டுள்ளது. நாட்டில் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டுள்ளதால் அமைச்சர்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டாம் என ஜனாதிபதி அதன் பின்னர் அறிக்கை ஒன்றையும் விடுத்திருந்தார்.

அம்பாந்தோட்டையில் சீனாவில் பிரசன்னத்தை தொடர்ந்தே இந்தியா இந்த திட்டத்தை முன்னெடுத்துள்ளதாக இந்திய அவதானிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வடபகுதியில் இந்தியா பல மில்லியன் டொலர் அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மேற் கொண்டு வருகின்றது. ஆனால் வட பகுதியின் அபிவிருத்தியில் இந்தியாவுக்கு நிறைவேற்று அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளது.

இந்த நிலையில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் மேற்கொள்ள திட்டமிடப்பட்ட வர்த்தக உடன்படிக்கைக்கு எதிராக சிங்கள மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருவது இலங்கை அரசுக்கு மேலதிக நெருக்கடிகளை தோற்றுவித்துள்ளதாக கொழும்பு தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதனிடையே விடுதலைப்புலிகள் முறியடிக்கப்பட்ட பின்னர் புலம்பெயர் தமிழ் சமூகத்தை தனது கண்காணிப்பின் கீழ் இந்தியா கொண்டுவந்துள்ளதென கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (6)

# ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 14ஆவது கூட்டத்தொடர் இன்று ஜெனிவாவில் ஆரம்பம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 14ஆவது கூட்டத் தொடர் இன்று ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ளது. இதன்போது இலங்கையின் இராணுவம் போர் குற்றங்களில் ஈடுபட்டது என்பதை வெளிக்காட்டும் நோக்கில் அரச சார்பற்ற நிறுவனங்களை சேர்ந்த 10 பேர் அடங்கிய குழுவினர் ஜெனிவா சென்றுள்ளனர்.

போர்க் குற்றங்களை உறுதிப்படுத்தும் வீடியோ காட்சிகள் வவுனியாவில் உள்ள முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலி உறுப்பினர்களின் குரல் பதிவுகள் என்பவற்றை இந்த குழுவினர் கூட்டத்தின் போது சமர்ப்பிக்கவுள்ளனர்.

இந்த கூட்டத்தில் மனித உரிமைகளுக்கான தமிழர் அமைப்பின் தலைவரான பிரான்சை சேர்ந்த கிருபாகரன், உலகத் தமிழ் பேரவையின் தலைவர் போதகர் இமானுவேல் உள்ளிட்டோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதனிடையே ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கையின் சட்டமா அதிபர் தலைமையிலான குழுவும் கலந்துகொள்ளவுள்ளது. (6)

# நிலக் கண்ணிவெடி அகற்றும் பணிகளில் சிக்கல் நிலைமை

(கொழும்பு)

நிலக்கண்ணி வெடி அகற்றும் பணிகளில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிலக் கண்ணிவெடி அகற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு தேவையான நிதி உதவிகள் கிடைக்கப் பெறாமையினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. நிலக் கண்ணிவெடி அகற்றும் பணிகள் இன்னமும் பூர்த்தியாகவில்லை எனவும் இறுதிக் கட்ட யுத்தம் நடைபெற்ற பிரதேசங்களில் கண்ணி வெடி அகற்றும் பணிகள் மேற்கொள்ளப் படவேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இப் பணிகளில் ஈடுபட்டுள்ள அநேகமான தொண்டு நிறுவனங்களுக்கு எதிர்வரும் யூலை, ஆகஸ்ட் மாதங்கள் வரையிலேயே நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

இப்பணிகளுக்கு இந்த ஆண்டில் மட்டும் இன்னும் ஒன்பது மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

தற்போதைய மதிப்பீடுகளின் அடிப்படையில் இலங்கையில் புதைக்கப்பட்டுள்ள சகல நிலக்கண்ணி வெடிகளையும் அகற்றுவதற்கு இன்னமும் 20 ஆண்டுகள் தேவைப்படலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வன்னிப் பிரதேசத்தின் முக்கிய பாதைகள் மற்றும் குடியிருப்புப் பிரதேசங்களில் நிலக்கண்ணிவெடி அகற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6)

# COLOMBO COMMERCE RESOURCE CENTRE

# கொழும்பு வணிகவள நிலையம்

## முன்னோடிப் பரீட்சை க.பொ.த.உயர் தரம்-2010

வணிகக்கல்வி - I பகுதி -I நேரம் : 1 மணி

◆1 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் தொடர்பில் சரியான விடையைத் தெரிவு செய்க.

1)ஒரு வணிக நிறுவகம் ஏனைய வணிக நிறுவகங்களில் தங்கியிருக்க வேண்டும் ஏனெனில்
(1) சிறக்குமியல்பு (2) புதிய தொழில்நுட்பம்
3) தொடர்பாடல் அபிவிருத்தி
(4) துணைச் சேவைகள் (5) திறந்த பொருளாதாரக் கொள்கைகள்

2)பின்வருவனவற்றுள் எது ஒரு வணிகத்தில் உடைமையாளர் அக்கறை கொள்வதற்கான பிரதான காரணம்
(1) உறுதித்தன்மை (2) தொழில் தன்மை, சட்டதேவை
(3) சந்தைப்பங்கு, இலாபம் (4) கொடுப்பனவுகள், பெறுவனவுகள்
(5) வேலைவாய்ப்பு, கொடுப்பனவுகள்

3)ஒரு வணிக நிறுவனத்தின் வரிவானதும் நீண்ட காலத்திலுமான வீச்சு (Broad, Long, Rage)
(1) இலக்கு (Goal) (2) குறிக்கோள் (Objective)
(3) தூரநோக்கு (Vision) (4) இலட்சிய நோக்கு (Mission)
(5) உபாயமார்க்கம் (Strategies)

4)பின்வருவனவற்றுள் எது வணிகம் ஒன்றின் கருமச் சூழலாக (அண்மியசூழல்) Task Enviornment) கருதக் கூடியது
(1) உரிமையாளர் (2) முகாமையாளர்
(3) வாடிக்கையாளர்
(4) ஊழியர்கள் (5) நிறுவன கலாசாரம்

5)இலங்கை அரசின் பிசிக்கால் (அரச இறை) கொள்கையை நடைமுறைப்படுத்தும் அமைப்பு எது?
(1) திறைசேரி (2) நிதித்திட்டமிடல் அமைச்சு
(3) அரசாங்கத்து வங்கி
(4) இலங்கை மத்திய வங்கி
(5) உள்நாட்டு இறைவரித்திணைக்களம்

6)வெளிநாட்டுக் கம்பனி (Overseas Company) என்பது
(1)ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளில் நடவடிக்கையை மேற்கொள்ளும் கம்பனி
(2)வெளிநாடுகளில் தொழிற்படுவதற்கு இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள கம்பனி
(3)வெளிநாட்டில் உருவாக்கப்பட்டு இலங்கையில் தொழிற்படும் கம்பனி
(4)வெளிநாடுகளில் இருந்து மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்யும் ஒரு கம்பனி
(5)பங்குச் சந்தையில் பங்கு விற்பனை செய்யத்தகுதியுள்ள கம்பனி ஆகும்.

7)தயாரிக்கப்பட்ட தேசிய தரத்தினை நடைமுறைப்படுத்துதல்
(1) தரக்கட்டுப்பாடு (2) தரப்பரிசோதனை
(3) தரப்படுத்தல்
(4) மொத்தத்தர முகாமை (5) தரவட்டம்

8)பங்குடமை இலாபமாற்றத்திற்கு ஏற்ப மூலதனத்திற்கு வட்டியைப் பெறும் பங்காளர்.
(1) அமைதிப் பங்காளர் (2) உறங்கும் பங்காளர்
(3) போலிப் பங்காளர்
(4) முதன்மைப் பங்காளர் (5) பெயரளவில் பங்காளர்

9)பின்வருவனவற்றுள் எது ஒரு உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியாகக் (Licensed Specilised Banks) எனக் கருதப்பட முடியாது.
(1) தேசிய சேமிப்பு வங்கி
(2) வரையறுத்த தேசிய அபிவிருத்தி வங்கி
(3) லங்கா புத்தார அபிவிருத்தி வங்கி
(4) வரையறுத்த சனச அபிவிருத்தி வங்கி
(5) DFCC வர்த்தன வங்கி

10)கூட்டுறவுச் சங்கங்களைக் கட்டுப்படுத்துதல், பொதுமக்களின் முறைப்பாடுகளை ஆராய்தல், அரச கொள்கைகளை சங்கங்களுக்கு அறிவித்தல் போன்றவற்றை மேற்கொளளும அமைப்பு
(1) கூட்டுறவு சந்தைப்படுத்தல் சம்மேளனம்
(2) கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்
(3) கூட்டுறவு சேவை ஆணைக்குழு
(4) இலங்கை தேசிய கூட்டுறவு பேரவை
(5) கூட்டுறவு முகாமைத்துவ நிறுவகம்.

11)பின்வருவனவற்றுள் எது மத்திய வங்கியின் மையத் தொழிற்பாடு தொடர்பாகத் தவறானது ஆகும்.
(1) பொது படுகடன் முகாமைத்துவம்
(2) நாணயக் கொள்கையைத் தயாரித்தல்
(3) நாணயத்தை வெளியீடு செய்தல்
(4) அரச நிதி பொருளாதார ஆலோசகராகத் தொழிற்படுதல்
(5) செலாவணிக் கொள்கையைத் தயாரித்தல்

12)சேவையில் ஈடுபட்டிருக்கும் ஊழியர் தமக்கு தொழில் ரீதியாக எதிர்பாராது ஏற்படும் நோய்கள் பாதிப்புக்களுக்கு இழப்பீட்டைப் பெறுவதற்காக மேற்கொள்ளப்படும் காப்புறுதி ஒப்பந்தம் அழைக்கப்படுவது.
(1) ஊழியர் நட்ட ஈட்டுக் காப்புறுதி
(2) தனிநபர் சடுதி விபத்துக் காப்புறுதி
(3) ஊழியர் பொறுப்புக் காப்புறுதி
(4) ஆதன உரிமையாளர் பொறுப்புக் காப்புறுதி
(5) ஆதார நிதிக்காப்புறுதி

13)கிரயம், பாதுகாப்புத் தொடர்பாக மிகவும் அனுகூலமான போக்குவரத்து முகாமை எது?
(1) பெருந்தெருப் போக்குவரத்து
(2) புகையிரதப் போக்குவரத்து
(3) குழாய் வழிப் போக்குவரத்து
(4) நீர்ப் போக்குவரத்து
(5) விமானப் போக்குவரத்து

14)விரைவாக் கெட்டுப் போகும் பொருட்களுக்கு பெரும்பாலும் கைக்கொள்ளப்படும் மொதத வியாபார வகை எது?
(1) வணிக மொத்த வியாபாரம்
(2) உற்பத்தி மொத்த வியாபாரம்
(3) முகவர் மொத்த வியாபாரம்
(4) சுயாதீன மொத்த வியாபாரம்
(5) பூரண சேவை வழங்கும் மொத்த வியாபாரம்

15)ஆசிய பசுபிக் வலையச் சந்தையில் (The Asia fasific Region) அங்கம் வகிக்கும் நாடுகள் தொடர்பாக தவறானது எது?
(1) அவுஸ்ரேலியா (2) ஜப்பான்
(3) தென் கொரியா (4) சிங்கப்பூர்
(5) இத்தாலி

16)பின்வருவனவற்றுள் சட்டதீரியாக கைமாற்றத்தக்க சாதனம் எது?
(1) பங்கு ஆணைப்பத்திரம்
(2) பரிமாற்றும் உண்டியல் (3) பங்கிலாபச் சீட்டு
(4) காசுக்கட்டளை (5) மேற்கூறிய அனைத்தும்

17)பின்வருவனவற்றுள் எது அறிவு செயற்பாட்டு முறைமையில் பயன்படுத்தப்படும் மென்பொருள் முறைமையாகும்?
(1)இலத்திரனியல் அஞ்சல் முறைமை
(2) கணனி உதவியுடனான வடிவமைப்பு
(3) சொல் செய்முறைப்படுத்தல்
(4) இருப்புக் கட்டுப்பாட்டு முறைமை
(5) கடன் அறிக்கையிடல் முறைமை

18)பின்வருவனவற்றுள் எது வெப்தள விபரச் கொத்துக்களை (WEB Directories) உள்ளடக்கிய தொகுதியாகும்?
(1) Allthe web / MSN / Teomg
(2) About / Beacoup / Google
(3) Askjeeves / Google / Yahoo
(4) About / Beaucos / Opendictory
(5) Internet Fubliclibrary / Open directory / Altavista

19)கணினியை அடிப்படையாகக் கொண்ட தகவல் முறைமைத் தொழிற்பாடு ஒன்று
(1) வன் பொருள் (Hard ware)
(2) மென்பொருள் (Soft ware)
(3) உயிர்பொருள் (live ware)
(4) நிறுவனப் பொருள் (Firm ware)
(5) வெளியீடு (Output)

20)முகாமைத் தகவல் முறைமையினை ஒழுங்குபடுத்துவதற்கு அடிப்படையாகப் பயன்படுத்தப படுவது
(1) அறிவச் செயற்பாட்டு முறைமை (KWS)
(2) காரியாலயத் தன்னியக்க முறைமை (OAS)
(3) தீர்மானத்துணைமுறைமை (DSS)
(4) கட்டளைத் துணை முறைமை (ESS)
(5) கொடுக்கல் வாங்கல் ஒழுங்கமைப்பு முறைமை (TPS)

◆21 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான சொற்களுடன் வெற்றிடங்களை நிரப்பி விடையளிக்குக.

(21) உற்பத்திகளைப் பாவனையாளர்களிடம் ஒப்படைப்பதுடன் தொடர்புடைய கருமம் ............................................ ஆகும்.

(22) காப்புறுதிக் கம்பனியொன்று தனது நட்ட இடரை பகுதியளவில் பரிமாற்றம் செய்ய தான் ஏற்றுக் கொண்ட ஒப்பந்தத்தை இன்னொரு காப்புறுதி நிறுவனத்தில் காப்புறுதி ஒப்பந்தத்தை ஏற்படுத்தல் ............................................ எனப்படும்.

(23) வணிகத்தின் இலாபத்தன்மையைப் பாதுகாப்பதற்குப் பேணப்படும் சொத்துக்கள் ............................................ ஆகும்.

(24)தனிநபருக்கு உரித்தான இயற்கைச் சூழலை பொருத்தமில்லாத அல்லது கலா சாரத்திற்குப் பொருந்தாத எவ்வித கருமங்களையும் செய்வதில்லை என புவி மாநாட்டிற் குரிய அங்கத்துவ நாடுகளால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கை ............................................ என அழைக்கப்படும்.

(25)ஒரு கம்பனி இன்னுமொரு கம்பனியின் மூலதனத்தில் பெரும்பகுதி பங்குகளைக் கொள்வனவு செய்து குறித்த கம்பனியைக் கட்டுப்படுத்துதல் ............................................ ஆகும்.

(26)காசேலை ஒன்று பிறப்பித்தவர் கணக்கில் போதிய பணம் இல்லாமை காரணமாக வங்கி மறுக்கும் சந்தர்ப்பத்தில் ............................................ எனும் பதம் குறிப்பிடப்படும்.

(27)களஞ்சியத்தில் பொருட்கள் பெறப்பட்டதனை உறுதிப்படுத்தி களஞ்சிய அதிகாரியினால் வழங்கப்படும் ஆவணம் ............................................ ஆகும்.

(28)ஏற்றுமதியாளருக்கான கொடுப்பனவுக்கு ............................................ உத்தரவாதம் அளிக்கும் ஆவணம் ஆகும்.

(29)கணனிமுறைமை ஒன்றிலே பயன்படுத்தப்படும் பௌதீக உபகரணங்கள் ............................................ எனப்படும்.

(30)இணையச் (Inter) சேவையை இணைக்கும் இடைநடுவர் ............................................ ஆகும்.

◆31 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடைகளைத் தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் எழுதுக.

(31)குறித்த நபருடைய புதிய கண்டுபிடிப்பிற்கு அரசினால் வழங்கப்படும் சான்று எவ்வாறு அழைக்கப்படும்?

(32)வணிகச் சேர்க்கைகள் (Business Combination) இடம்பெறக் கூடிய இரு முறைகளும் எவை?

............................................

(33)உளநாட்டு உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் அரசு உறுதிப் படுத்தி வழங்கும் குறியீடு எவ்வாறு அழைக்கப்படும்?

(34)விரய முகாமையின் மூன்று பகுதிகளையும் குறிப்பிடுக.

(35)இழப்பீட்டு அடிப்படையில் அமையாத காப்புறுதி ஒப்பந்தங்கள் எவை?

(36)மின்னஞ்சல் தகவல்களின் அந்தரக்கத் தன்மையை உறுதி செய்வதற்கு பொதுவாகப் பயன்படுத்தப்படும் நுட்பம் எவ்வாறு அழைக்கப்படும்.

(37)தலாவருமானத்திற்கும் அமைய உலகின் மிகப் பாரிய பிராந்திய சங்கம் எது?

(38)பொதுமக்களின் சுகாதார நோக்குடன் என்ன வகையான பொருட்களுக்கு இறக்கு மதித்தடை ஏற்படுகின்றது?

(39)தகவல் தயாரிப்பிற்கான தொழில்நுட்ப முறைகள் யாவை?

(40)கணனியை அடிப்படையாகக் கொண்ட தகவல் முறைமையின் வகைகள் யாவை?

## வணிகக்கல்வி - I பகுதி -II

நேரம் : 2 மணி

அறிவுறுத்தல் :

முதலாம் இரண்டாம் வினாக்களுக்கும் ஏனைய இரண்டு வினாக்களுக்குமாக மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடையளிக்க.

(1)கீழே குறிப்பிடப்படுவது வணிகம் தொடர்பான ஜனரஞ்சகமான கருத்து ஆகும்.
"இலாபம் உழைப்பதனை நோக்கமாகக் கொண்ட எந்தவொரு கருமமும் வணிகம் ஆகும்"
இது ஏவ்வாறு வணிகம் என்பதுடன் சிறப்பான முறையில் பொருந்துகின்றது என்பதனை விளக்குக.

(2)அ.உற்பத்தி (product) உற்பத்தி தொழிற்பாடு (Production) என்பவற்றை விளக்குக.
ஆ.உற்பத்தியின் உள்ளடக்கங்களைக் குறிப்பிடுக.

(3)வணிகச் சூழலின் பிரதான வகைகளைக் காட்டும் பாய்ச்சல் கோட்டு வரைபடம் ஒன்றை வரைக.

(4)வணிகங்களின் உதவியுடன் அரசாங்கம் ஒன்று அடைய எதிர்பார்க்கும் பேரினப பொருளாதார இலக்குகள் (Macro Economic Goals) ஆறினைக் குறிப்பிட்டு விளக்குக.

(5)பங்குடமை தொடர்பில் பின்வரும் பங்காளர்களை விளக்குக.
அ. இரகசியப் பங்காளர் (SecretPartner) ஆ. அமைதிப்பங்காளர் (Silent Partner))
இ. உறங்கும் பங்காளர் (Sleeping Partner)

(6) கூட்டுறவின் விழுமியங்களைக் குறிப்பிடுக.

(6 x 3 = 18 புள்ளிகள்)

(2)(1)காசோலை புறக்குறிப்பிடுதல் எனப்படுவது யாது?
காசோலை ஒன்று புறக்குறிப்பிடப்படும் சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

(2) இலங்கை மத்திய வங்கியின் முதன்மைத் தொழிற்பாட்டையும் முகவராண மைத் தொழிற்பாட்டையும் தனித்தனியாக விளக்குக.

(3)மறுகாப்புறுதி (Re Insunance) ஒப்புறுதிக்கும் (Under writting) இடையிலான வேறுபாட்டினை விளக்குக.

(4)இலங்கையில் பொருட்களையும் பிரயாணிகளையும் கொண்டு செல்வதற்காகக் காணப்படும் வீதிப் போக்குவரத்து முறைமையின் கட்டமைப்பை விளக்குவதுடன் வீதிப் போக்குவரத்து முறைமையின் பலவீனங்கள் பற்றிக் கருத்துரைக்க.

(5) தற்காலத்தில் சில்லறை வியாபாரங்களானது களஞ்சியங்களற்ற வியாபாரிகளாக (Store Retailers) காணப்படுகின்றனர். இதற்குப் பயன்படுத்தப்படும் முறைகளை விளக்குக.

(6)பின்வருவன பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.
அ.தேடல் இயந்திரம் (Search Engines)
ஆ.பல்லூடகம் (Multimedia) (6 x 3 = 18 புள்ளிகள்)

(3)(1) வணிகச் செயற்பாடு ஒன்றுக்கு இலக்கு மற்றும் குறிக்கோள் இருக்க வேண்டியதன் அவசியத்தை விளக்குக.

(2) தனியார் துறை வணிகங்களைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு பின்பற்றும் தந்திரோபாயங்கள் மூன்றைக்குறிப்பிட்டு விளக்குக.

(3)பின்வருவன பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.
அ.இழிவுக் கட்டணம் (Minimum subsription)
ஆ.கம்பனிகளின் ஆலோசனை ஆணைச்சபை (Advesory Commsion)
இ.பங்கு ஒப்புறுதி அளித்தல் (Share underwrit)

(4) வரையறுத்த பொதுக்கம்பனி ஒன்றைக் கட்டுப்படுத்தி அதிகாரம் (Controlling Power) செலுத்தக் கூடியவர்கள யார்? அந்த அதிகாரத்தை அவர்கள் எப்படியான முறைகளிலும் வழிகளிலும் செய்ய முடியும்? (4 x 3 = 12 புள்ளிகள்)

(4)(1)வணிகத்தின் சமூகப் பொறுப்பு என்பது ஒரு விசாலமான தத்துவமாகும் இத்தத்துவத்தைப் பலதரப்பினரும் கருத்திற் கொள்ளுதல் வேண்டும் அத்தரப்பினர்களைக் குறிப்பிட்டு விளக்குக.

(2) ஒரு பங்குடைமையானது சட்டத்திற்கமைய பங்குடமைகள் கலைக்கப்படும் முறையினை பாய்ச்சல் கோட்டு வரைபடம் மூலம் விளக்குக.

(3) இலங்கை அரசு தனியார்துறைக்கு கையளித்துள்ள புதிய பரிமாணமிக்க கைத்தொழில் கொள்கையின் இலக்குகள் யாவை?

(4) அ. வணிக இணைப்பு தொடர்பாக, உடைமையாக்கல் (Aquisitions) ஒன்றிணைதல் (mergers) என்பவற்றை விளக்குக.
ஆ. கூட்டுமுயற்சி என்பதன் மூலம் கருதுவது யாது? (4 x 3 = 12 புள்ளிகள்)

(5)(1) உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிக்கும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான ஒற்றுமைகளையும் வேறுபாடுகளையும் குறிப்பிடுக.

(2)தொடர்பாடல் செய்முறையின் அடிப்படைக் கூறுகள் ஆறினைக் குறிப்பிடுக.

(3)பின்வருவனபற்றிச் சிறுகுறிப்புக்கள் எழுதுக.
அ.உலக வியாபார அமைப்பு (WTO)
ஆ.வழி உண்டியல் (Waybill)
இ.முன்கூட்டியே பணம் செலுத்திய அட்டை (Prepay Card)

(4) நடமாடும் வணிகத்தின் (Mobile Commerce) வணிகங்களுக்கும் வாடிக்கையாளருக்கும் ஏற்படும் அனுகூலங்களை இருவருக்கும் தனித்தனியாகக் குறிப்பிடுக.

(4 x 3 = 12 புள்ளிகள்)

(6) (1) வெளிநாட்டு கொள்வனவாளரிடமிருந்து தரவானையைப் பெற்றுக் கொண்ட ஏற்றுமதியால் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

(2)அ.வணிகர் வங்கி ஒன்றினால் வழங்கப்படும் சேவைகளைக் குறிப்பிடுக.
ஆ.வரவு அட்டை ஒன்றின் முன்புறத்தில் காணப்படும் தகவல்களைக் குறிப்பிடுக.

(3) ஒரு நாட்டின் சர்வதேச வியாபாரத்தின் தன்மையைப் பகுப்பாய்வு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் குறிகாட்டிகளைக் குறிப்பிட்டு விளக்குக.

(4)அ.இணைத்தலிலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய வணிகச் சேவைகள் யாவை?
ஆ.தகவல் முறைமையின் பெறுப்பினை விள்க்குக? (4 x 3 = 12 புள்ளிகள்)

# சமூகப் பொறுப்பை உணர்த்தி நிற்கும் வலம்புரியின் ஆசிரியர் தலையங்கம்

**29.05.2010 அன்று வலம்புரியில் வெளியான "வெசாக் அனுஷ்டிப்பின் உட்பொருள் உணர்வீர்" என்ற ஆசிரியர் தலையங்கம் தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்திய கலாநிதி செல்வம் கண்ணதாசன் அவர்கள் எழுதிய கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது. அவரின் கருத்துச் செறிவும் சமூகப் பார்வையும் மிக்க இக்கட்டுரையின் காத்திரத்திற்காக, 29.05.2010 அன்று வெளியான ஆசிரியர் தலையங்கமும் இங்கு மீள்பிரசுரம் செய்யப்படுகின்றது. (ஆ-ர்)**

29.05.2010 அன்று வெளியான வலம்புரி ஆசிரியர் தலையங்கம் என்னைச் சிந்திக்கத் தூண்டியுள்ளது. எம் தமிழ்ச் சமூகத்தின் மீதுகொண்ட அக்கறையுடன் யதார்த்த பூர்வமாக மிகவும் எளிமையாக வலம்புரியின் பெரும்பாலான ஆசிரியர் தலையங்கங்கள் தீட்டப்பட்டு வருவதனை அவதானித்திருக்கிறேன்.

வெசாக் கூடுகளால் யாழ்ப்பாணம் ஒளிர்வது இப் பிரதேசம் சிங்களமயமாதலின் ஒரு குறியீடே என சில இணையத்தளங்கள் விவாதித்து வருகையில், சிங்கள மக்களின் நற்பழக்கவழக்கங்களை நடுநிலைமையுடன் கூறியுள்ளமை வரவேற்கத்தக்கதுடன் எம்மைச் சிந்திக்கத் தூண்டியுள்ளது.

அதற்காக எமது பிரதேசம் சிங்களமயமாவதனை ஆசிரியர் ஆதரிக்கிறார் என்று அர்த்தமில்லை என்றே நினைக்கிறேன். இரண்டுமே வெவ்வேறு தளங்களில் நோக்கப்பட வேண்டியவை.

எனது சில கருத்துக்களை வாசகர்களுடன் பகிரலாமெனக் கருதுகிறேன்.

இப்பொழுது எம்முன் எழுந்துள்ள மாபெரும் கேள்விகள் எம் சமுதாயம் குறிப்பாக இளைய சமுதாயம் தடம்புரண்டு செல்கிறதா? ஆயின் அதற்குப் பொறுப்புக் கூறவேண்டியவர் யார்? அதனை எவ்வாறு சீர்செய்யலாம்? என்பவையே. சமூக அக்கறையுள்ள ஒவ்வொருவரும் இதற்கான விடைகளைத் தேடிக் கொண்டிருக்கிறோம்.

முதலாவது கேள்விக்கான விடை பெரும்பாலானவர்களின் பொதுக்கருத்தான "ஆம்" என்பதேயாகும். எனின் மற்றைய கேள்விக்கான விடையில் என்போன்ற சிலரது கருத்துக்கள் பெரும்பாலானோரின் கருத்துக்களுடன் முரண்படுகின்றன. பெரும்பாலானவர்கள், இளைய சமுதாயத்தின் மீது சுட்டுவிரலை நீட்டுகின்றபோது ஏனைய மூன்று விரல்கள் தம்மையும், பெருவிரல் பூமியையும் நோக்குவதை கவனிக்கத் தவறிவிடுகின்றனர்.

எனவே இளைஞர், யுவதியர் ஒரு பங்கு (ஒரு விரல்), மூன்று பங்கு (மூன்று விரல்கள்), பெற்றோர் (ஒரு விரல்), ஆசிரியர் (ஒரு விரல்), சமயகுருமார், புத்திஜீவிகள் மற்றும் சமூகப் பெரியோர் (ஒரு விரல்), இறுதி விரல் சுட்டுவது பூமி மற்றும் இயற்கையின் காலச்சக்கரம் என்றே கருதுகிறேன்.

ஆகவே, அவர்களை நல்வழிப்படுத்த எமது பங்களிப்பே அதிகம் தேவை என்பது எனது தாழ்மையான கருத்து. எமது துரதிர்ஷ்டம், தமிழினம் சுயநலம் மிக்கதாயும், பொறாமை கொண்ட கழுத்தறுப்புகள், காட்டிக் கொடுப்புகள் மேற்கொள்வதோடு மற்றவர் மீது சுலபமாகப் பழி சுமத்துவதோடு தானாக முன்வந்து எதனையும் செய்யாது, அவர் செய்வார், இவர் செய்வார் என்றிருக்கிறது.

விடயம் எல்லை மீறிப்போகு முன், எங்கள் வீட்டுக் கதவுகளைத் தட்டமுன் விழித்தெழுந்து, ஒன்றிணைந்து, சமூகப் பொறுப்புடன் செயற்படுவோம்.

### பெற்றோர்களே...

கடவுளிலும் மேலாகக் கருதப்படும் எம்மையே, குழந்தை முதன் முதலில் பிரதியெடுக்க விரும்புகிறது. எனவே, நற் பிரஜைகளாக அவர்கள் கண்முன் வாழவேண்டும். நாம் மற்றவரை ஏமாற்றுவதைக் குழந்தை அறிகின்றபோது, ஒன்றில் ஏமாற்றுவது தவறில்லை என நினைக்கிறது. அல்லது தான் ஏமாற்றினால் பெற்றோர் கேட்கமாட்டார்கள் என நினைக்கிறது. இந்தக் குழந்தை வளர்ந்தால் எப்படியிருக்கும்?

குடும்ப ஒற்றுமையின்மை, சண்டைகள், கடுமையான தண்டனைகள் என்பன ஆழ்மனதில் ஆறாத வடுக்களாகப் பதிகின்றன. இவையே பிற்காலத்தில் எதிர்மறை எண்ணங்களாகவும் அதன் விளைவாக எதிர்மறை மனப்பாங்கு உருவாகித் துர்நடத்தைகளில் முடிவுறுகின்றது.

நாங்களே பாத்திரவாளிகளாக இருந்துகொண்டு இளைஞர்களைத் திட்டி என்ன பலன்? நாங்கள் பிள்ளைகளுடன் எவ்வளவு நேரம் செலவழிக்கிறோம் என்று எண்ணிப் பார்த்தோமா? தொலைக்காட்சியில் தொலைக்கும் நேரத்தில் ஒரு சிறுமணித் துளியாவது பிள்ளைகளை அக்கறையாக விசாரித்தோமா? பிள்ளைகளுடன் நட்புறவினைப் பேணாதுவிட்டால் அவர்கள் தங்கள் பிரச்சினைகளை எவ்வாறு எங்களுக்குக் கூறுவர்? நண்பர்களை நாடிச் செல்வர். அவர்களுடன் கூடுதலான நேரத்தைக் கழிக்க விரும்புவர். ஒரு தீய நண்பர் போதாதா அனைவரையும் கெடுக்க.

இளைஞனாகவோ, யுவதியாகவோ வளரும் பொழுது சுயமாக செயற்படவே விரும்புவர். குடும்பத்தில், சமுதாயத்தில் முக்கிய பாத்திரம் வகிக்க விரும்புவர். அதனைப் புரிந்து கொள்ள வேண்டும். தாங்கள் கவனிக்கப்பட வேண்டும், மதிக்கப்பட வேண்டும் என நினைக்கின்றனர்.

இன்னும் குழந்தைகளாகவே கருதி அவர்களது சுயத்தைச் சிதைக்க வேண்டாம். நல்லனவற்றை செய்கின்ற போது செயலைப் பாராட்டுவோம். குடும்ப ஆலோசனைகளில் அவர்களையும் சேர்த்துக் கொள்வோம். இவ்வாறு செய்யாது அவர்களை ஒதுக்கின், இவர்கள் பிற்காலத்தில் பல்வேறு சவால்களுக்கு முகம்கொடுக்க முடியாது துவண்டுபோகலாம் அல்லது தீயோரின் கைப்பிள்ளைகளாக உருவாகலாம்.

அதேவேளை, அளவுக்கதிகமான செல்லமும் அவர்களைக் கெடுத்துவிடும். எப்பொழுதும் பெற்றோர் எம்மீது கண் வைத்திருக்கின்றனர் என்ற எண்ணம் இருக்கவேண்டும். தொலைபேசியோ, மோட்டார் சைக்கிளோ வாங்கிக் கொடுக்கும் போது இது தேவையா, இதனுடைய செலவுகளை எப்படிச் சமாளிப்பார்கள் என்று சிந்தித்து வாங்கிக் கொடுப்பதோடு எப்படி இதனைப் பாவிக்கிறார்கள் எனக் கண்காணிக்கவும் வேண்டும். பல பெற்றோர் இந்த விடயத்தில் நன்மை செய்கிறோம் என நினைத்து தீமையே செய்கின்றனர்.

பாடசாலைகள் முக்கியமாக தனியார் கல்வி நிறுவனங்கள் என்பவற்றில் பிள்ளைகளின் வரவு, செயற்பாடுகள் பற்றி அக்கறை கொள்ளவேண்டும்.

வைத்தியகலாநிதி
**செல்வம் கண்ணதாசன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
மருத்துவபீடம், யாழ்.பல்கலைக்கழகம்.

### ஆசிரியர்களே...

பெரும்பாலான ஆசிரியர்களின் புலம்பல் என்னவென்றால்,இந்தக்கால மாணவர்கள் சொல்வழி கேட்கிறார்களில்லை, கீழ்ப்படிகிறார்களில்லை, எம்மை மதிக்கிறார்களில்லை என்பதாகும்.

மாணவர் நன்மதிப்பைப் பெற்ற பல ஆசிரியர்களைக் கண்டிருக்கிறேன். சற்று சிந்தித்துப் பார்த்தால் நாங்கள் யாரை மதிப்போம், எங்களிலும் அறிவு கூடியவர்களை எங்களிலும் நன்நடத்தை உள்ளவர்களை என்பது புலனாகும். மாணவர்கள் ஒரு சில நிமிடங்களிலேயே ஆசிரியர்களை எடைபோட்டு விடுவர்.

உலகம் மிக மிக வேமாக வளர்ந்துவருகிறது. இயற்கையும் தனக்குத் தேவையான அறிவும் ஆற்றலுமுள்ள குழந்தைகளையே உருவாக்குகிறது. அவர்களுக்கு அறிவை வேகமாக வளர்ப்பதற்கான சந்தர்ப்பங்களை அள்ளி வழங்குகிறது.

அவர்களுக்கு ஈடாக எங்களது அறிவாற்றலைத் தொடர்ந்து வளர்த்துக்கொண்டே இருக்கவேண்டும். பெரும் பாலான ஆசிரியர்கள் அதைச் செய்து கொண்டுதானிருக் கின்றனர்.

மற்றையது எமது கல்விக் கொள்கை. மாணவர்களின் ஞாபக சக்தியையே சோதிக்கிறது. கல்வி என்பது எத்தகைய சவால்களையும் சமாளிக்கும் ஆற்றலை வழங்கவேண்டும். அநேகமான பாடசாலைகளில் தூரநோக்கு வாசகம் " நற்பிரஜைகளை உருவாக்குதல்" என்றிருக்கும். அதற்கு யாது செய்கிறோம்.பெரும்பாலும் பரீட்சைகளுக்கும் புள்ளிகளுக்குமே முன்னுரிமை கொடுக்கிறோம்.

நாங்கள் அரச உத்தியோகம் புரிகிறோம், கையெழுத்து வைத்தால் போதும் எப்படியும் சம்பளம் வரும் என்றில்லாது, பாடசாலையினதும் எங்களதும் குறிக்கோள்களுக்கமைய நாங்கள் தொழில்புரிவது போல மாணவர்களையும் இலட்சியங்களை உருவாக்கி அதனை நோக்கிப் பயணிக்கத் தூண்ட வேண்டும்.

கற்பித்தல் முறையானது கவரும் வகையிலமைதல் வேண்டும்.கேட்டல்,பார்த்தல், வாசித்தலும் எழுதலும் மற்றும் செய்து பார்த்தல் என கற்றல் முறைகள் மாணவனுக்கு மாணவன் வேறுபடும். இன்னும் நாம் பழைய முறையில்தான் இருக்கிறோமா? நவீன கற்பித்தல் முறைக்கு மாறிவிட்டோமா? மாணவர்களை எந்தளவு தூரம் கற்றல், கற்பித்தலில் பங்கு கொள்ளச் செய்கிறோம்?

ஒவ்வொரு மாணவனும் தனிச்சிறப்பான ஆற்றல் கொண்டவன். அது அவனுக்கென உரிய தனி இயல்பு. அதனை இனங்கண்டு அவனை அத்துறையில் ஊக்குவிக்க வேண்டும். மாணவனுக்கு புத்தகக் கல்வி மட்டுமல்லாது நன் நடத்தைகளும் சமூகப் பொறுப்புணர்வினையும் பழக்கப்பட வேண்டும்.

இறுதியாக, மாணவர்களின் எதிர் நடத்தைகளுக்குக் காரணம் ஆழ்மனதில் பதிந்துள்ள எதிர்மறையான எண்ணக் கருக்களே. அவர்களை நன்னடத்தையுள்ளவர்களாக மாற்றுவதற்கு, ***ஆழ்மனதில் பதிந்துள்ள எதிர்மறையான எண்ணக் கருக்களை, சுய ஊக்கக் கட்டளைகள் மூலம் நேர் எண்ணங்களால் பிரதி செய்வதே இதற்கான வழி*** .

இதற்கு பெற்றோர், ஆசிரியர் மற்றும் சமூக அக்கறையுள்ள யாவரும் முன்வர வேண்டும்.

## 29.05.2010 அன்று வெளியான வலம்புரியின் ஆசிரியர் தலையங்கம்

# வெசாக் அனுஷ்டிப்பின் உட்பொருள் உணர்வீர்

வெசாக் பண்டிகை நாடு பூராகவும் கொண்டாடப்படுகின்றது. தென்பகுதியை விட வடபுலத்தில் வெசாக் பண்டிகைக் கொண்டாட்டம் களைகட்டியிருப்பது கண்டு எதுவுமே புரியாமல் திகைத்து நிற்கும் பரிதாபம் மட்டுமே தமிழ் மக்களிடம் மிஞ்சியுள்ளது.

அதேநேரம் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த குடி என்ற பழம்பெருமை பேசுவதை விடுத்து, சிங்கள மக்களிடம் இருக்கக் கூடிய நல்ல இயல்புகளை நாமும் பின் பற்றப் பழக வேண்டும்.

இவ்வாறு கூறுவது சிலரின் விருத்தியடையாச் சிந்தனைக்குச் சீற்றமாக இருக்கலாம்.

அவ்வாறானதொரு சிந்தனை இருக்குமாயின் அது மிகப் பெரும் தவறு. நாம் எதிர்நிலைச் சிந்தனையை வளர்த்துவிட்டதால் எங்கள் எதிர்காலம் சூனியமாகிப் போகும் பரிதாப நிலையில் உள்ளது.

எனவே நாங்கள் நேர்கணியச் சிந்தனைக்குள் எங்களை உட்படுத்த வேண்டும்.

அவ்வகையில் சிங்கள மக்களிடம் குறிப்பாக அந்த இளம் சமூகத்திடம் இருக்கக் கூடிய பெரியவர்களை மதிக்கும் இயல்பையும் அவர்களிடம் இருக்க கூடிய இறை நம்பிக்கையையும் நாம் உற்றுநோக்குவது அவசியம்.

சிங்கள இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் தங்கள் பெற்றோரை-ஆசிரியர்களை-மதகுருமாரை-காலில் விழுந்து வணங்குவதைப் பார்க்கும் போது நாம் தலைகுனிந்து கண்ணீர் விடவேண்டியவர்களாக உள்ளோம்.

உயர் பண்பாட்டின் சொந்தக்காரர்கள் என்று எங்களை நாமே உயர்த்திக் கொண்டோமே தவிர எங்கேனும் எங்கள் இளம் சமூகம் பின்பற்றும் உயர் பண்பாட்டுக் கோலங்களை அடையாளப்படுத்த முடியுமா? என்றால் எதுவுமே இல்லை.

இந்நிலையில் எங்கள் இனம், அதன் உரிமை பற்றிய நினைப்புகளெல்லாம் கவலை தருவனவாகவே அமையும்.

வெசாக் பண்டிகை நடைபெறுகின்றது. ஒவ்வொரு படை முகாம்களிலும், காவலரண்களிலும் அந்த நாளை எவ்வாறு அனுஷ்டிக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும்.

ஆயுதம் ஏந்தியவர்கள்-போர் நடத்தியவர்கள் கௌதம புத்தபிரானை தொழும் காட்சி அவர்களின் இறைபக்தியையும், தெய்வநம்பிக்கையையும் மதப் பற்றையும் வெளிப்படுத்தி நிற்கின்றதல்லவா?

நாம் என்றால் அப்படிச் செய்வோமா? சிவராத்திரித் தினத்தில்தான் எங்கள் ஊர்ச் சாராயக் கடைகள் திறந்திருக்கும். அன்றுதான் விஜய், கமல், விக்கிரம் ஆகியோரின் காதல் புரிதல்கள் தொலைக்காட்சி வாயிலாக எங்கள் உள்ளங்களுக்கு கிளுகிளுப் பேற்றும்.

பியர் போத்தல்களுடன் இளவல்கள். கூடவே, அக்கினிகுண்டத்தில் இருந்து எழுவது போல சிகரட்புகை.

சிவசிவா உனக்கென்ற இரவில் இப்படியென்றால் நீ எப்படி எங்களுக்கு உதவுவாய்!

எங்கள் நடத்தை பிடிக்காமையால் நீ விட்டுவிலகி எட்டச் செல்ல புத்தருக்கு அவர்களின் பிரார்த்தனை பிடித்துக் கொண்டது.

அதனால் அவர் வன்னியிலும் குடியேறுகிறார்.

வன்னியில் இருந்த மக்கள் மீள்குடியேற முதல் அவருக்கு ஏன் இந்த அவசரம் என்று கேளாதீர்கள்.

முதலில் நாங்கள் திருந்துவோம். இறைவனை மகிழ்விப்போம். அவன் சங்கரன். ஒரு கணப்பொழுதில் சங்காரம் செய்வான்.

பின்பென்ன எங்கள் தாய் மண்ணில் எங்களுக்கு என்ன குறை?

திருந்துவோமா? திருத்துவோமா? நடக்குமா? நடந்தால் நாம் சொன்னது நடக்கும். இது சிவன் மீது ஆணை.







வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய உத்தியோகத்தரினால் வட்டு. தாவளையில் அமைந்துள்ள வள்ளுவர் சிறுவர் இல்ல மாணவர்களுக்கு வெசாக் தினத்தன்று கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உதயபால உரையாற்றுவதையும், சப் இன்ஸ்பெக்டர் பி.எம்.அபேவர்த்தன இனிப்பு பண்டம் வழங்குவதையும், ஒரு தொகுதி கற்றல் உபகரணம் அன்பளிப்பாக வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- கோபி)

## மஹோற்சவம்

(மருதங்கேணி)

புலோலி பர்வதவர்த்தனி சமேத பசுபதீஸ்வரர் ஆலய (பருத்தித்துறை சிவன் கோவில்) வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 9.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 நாட்கள் உற்சவம் நடைபெறும்.

மஹோற்சவத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை தேர்உற்சவமும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்த உற்சவமும் அன்று மாலை 5 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறும். (6-35)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

மஹோற்சவத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை சப்பறத்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் நடைபெறவுள்ளது.

தினமும் காலை 9 மணிக்கும் மாலை 5.30 மணிக்கும் வசந்த மண்டபப்பூஜை நடைபெறும். (6)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண்ணார்பண்ணை வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடந்து நடைபெறவுள்ளது.

மஹோற்சவத்தில் தினமும் காலை 10 மணிக்கும் மாலை 6 மணிக்கும் வசந்த மண்டபப் பூஜை நடைபெறும்.எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு சப்பறமும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு இரதோற்சவமும் இடம்பெறவுள்ளது. 19ஆம்திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் 11 மணிக்கு மகாயாக கும்பாபிஷேகமும்நடைபெறவுள்ளது. (6)

## பாடசாலை பஸ் சேவை சீரின்மையால் சிரமத்தை எதிர்நோக்கும் மாணவர்கள்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இ.போ.சபையினால் நடத்தப்பட்டு வரும் பாடசாலை சேவை சீராக நடைபெறுவதில்லையென மாணவர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக கல்லுவம் மற்றும் தொண்டைமானாறு பகுதிகளிலிருந்து காலை பருத்தித்துறைக்கு பாடசாலை சேவையாக வருகின்ற பஸ்கள் சில சமயங்களில் அல்வாய் நாவலடிச் சந்திக்கு வராமல் வியாபாரி மூலையூடாக நேரே பருத்தித்துறைக்கு போய் விடுவதால் நாவலடிச் சந்தியில் நிற்கும் பாடசாலை மாண,வர்கள் ஒழுங்காக பாடசாலைக்குச் செல்லமுடியாதிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த திங்கட்கிழமை அன்றும் இப் பாடசாலைச் சேவை சீராக நடைபெறாததால் நாவலடிச் சந்தியில் பஸ்சுக்கு காவல் நின்ற மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதில் பல சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

அதேபோன்ற உடுப்பிட்டி, `வல்வெட்டித்துறை பாடசாலைகளில் படிக்கின்ற மாணவர்களும் பாடசாலை முடிவடைந்த பின்னர் பொலிகண்டி, திக்கம் பருத்தித்துறைக்குச் செல்ல உரியநேரத்தில் பஸ்சேவை இல்லாததனால் பெரும் சிரமங்களை எதிர் கொள்வதாகவும் இதனால் கல்வியைத் தொடர இடையூறு எற்படுவதாகவும் எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பஸ்சேவை விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தி தமது கல்வியைத் தொடரமுன்வரவேண்டும் என பணிவான கோரிக்கையை விடுக்கின்றனர். (6-10)

## ஓமந்தைக்கான புகையிரத சேவையை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்படக்கூடும்

### புனரமைப்பு பணிகள் பூர்த்தியடையாததே காரணம்

(பருத்தித்துறை)

இலங்கை புகையிரத திணைக்களத்தினால் ஓமந்தைக்கான புகையிரதசேவை யை ஆரம்பிக்க மேலும் சில மாதங்கள் தாமதிக்குமென தெரிவிக்கப்படுகிறது.

புகையிரத பாதை புனரமைப்பு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அதே வேளை சில கிலோமீற்றர் தூரங்களுக்கு தண்டவாளம் பொருத்தும் பணிகள் பூர்த்தியடையாததினாலேயே இத் தாமதம் ஏற்பட்டுள்ளது.

அதேவேளை தாண்டிக்குளம் -ஓமந்தைக்குமிடையில் காணப்படும் பால வேலைகள் பல இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டும் வருகிறது.

புகையிரத திணைக்கள ஊழியர்கள் பாதை செப்பனிடுவதும் குறிப்பிடத்தக்கது. (6-10)

## மஹாகும்பாபிஷேகம்

(மருதங்கேணி)

பொலிகண்டி மருதம்புலம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய புனராவர்த்தன மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் 3 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6.50 மணி தொடக்கம் 8.41மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் நடைபெறவுள்ளது.

அதனை தொடர்ந்து தசதர்சனம், ஆசிர்வாதம் ,ஆசியுரைகள், ஆச்சாரி சம்பாவனை, குருவழிபாடு ,மஹாபிஷேகம் நடைபெறும்.

மாலை 7 மணியளவில் விஷேட பூசைகள் இடம்பெற்று அம்பாள் வீதியுலா வருதல் இடம்பெறும். (6-35)

## மணவாள கோல விழா

(மருதங்கேணி)

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுரஆழ்வார் ஆலய மணவாளக் கோலவிழா நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெறவுள்ளது. அன்று காலை 1008 சங்காபிஷேகம் நடைபெற்று விஷேடபூசைகள் இடம்பெறவுள்ளது.

மாலை வசந்த மண்டபூசை நடைபெற்று சுவாமி வெளிவீதி உலாவருதல் இடம்பெறும். (6-35)

## யாழ். செய்திகள்

## இறுவட்டு வெளியீடும் கௌரவிப்பு நிகழ்வும்


(யாழ்ப்பாணம்)

யாழ்.ஸ்ரான்லிக் கல்லூரி ஆசிரியர் மதுரகவி காரை. எம்.பி.அருளா னந்தனின் வர்ணனைத் தயாரிப்பில் உரு வமைக்கப்பட்ட வடமராட்சியின் பிரசித்தி பெற்ற கரவெட்டி தச்சன் தோப்பு சிந்தாமணி விநாயகர் ஆலயம், புலோலி பசுபதீஸ்வரர் தேவஸ்தானம், அல்வாய் வேவிலந்தை ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயம், தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயம் ,வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் ஆகிய ஐந்து ஆலயங்களின் 'இறுவட்டு' வெளி யீட்டு விழா கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 3 மணியளவில் கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக மல்லாகம் மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் கலந்து சிறப்பதுடன், ஆசியுரையினை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளும், வரவேற்புரையினை பிரதேச செயலக நிர்வாக கிராம அலுவலர் வி.க. சண்முகநாதனும், இறுவட்டின் வெளியீட் டுரையினை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவும், நன்றியுரையினை கலாசார அபிவிருத்தி அலுவலர் செ. ரூபகுமாரும் வழங்கவுள்ள னர்.

இந்நிகழ்வில் மதுரகவி காரை.எம்.பி அருளானந்தன், சமய அறிவுத்துறை சார்ந்த வளவாளர்கள் பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மா, செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன், ஓய்வுபெற்ற சிரேஷ்ட ஆங்கில விரிவுரையாளர் ச.விநாயகமூர்த்தி, வல்வை சிவகுரு வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன், வீடியோ பாலா ஆகியோர் பிரதேச செயலக சைவ ஆலோசனைச் சபையினரால் கௌரவிக்கப்படவுள்ளனர். (6)





திருநெல்வேலியில் இயங்கும் சிறுவர் பூங்கா முன்பள்ளி குழந்தைகள் காப்பகத்தில் அண்மையில் யுனெஸ்கோவின் முன்பள்ளி கல்விச் செயற்றிட்டம் ஆரம்பித்துவைக்கப்பட்டது, இதில் பாலகர்களின் பன்முக ஆளுமைகளை விருத்தியாக்கும் விளையாட்டு மூலமாகக் கற்கும் நவீன செயன்முறையை வளவாளர் பா.தனபாலன் ஆசிரியர் ஒருவருக்கு விளக்குவதையும், முன்பள்ளி பாலகர்களையும், ஆசிரியர்களையும் படங்களில் காணலாம்.

# கௌதமாலா,ஈக்வடாரில் எரிமலைகள் திடீர் சீற்றம்

## 2 பேர் பலி; 50 இற்கும் மேற்பட்டோர் படுகாயம்

(கௌதமாலா சிட்டி)

கௌதமாலா மற்றும் ஈக்வடார் நாடுகளில் 2 எரிமலைகள் வெள்ளி இரவு திடீரென வெடித்ததால் 2 பேர் உயிரிழந்தனர். 50க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். இதை யடுத்து அப்பகுதியில் இருந்து ஆயிரக் கணக் கானோர் வீடுகளிலிருந்து வெளியேறினர். விமான சேவையும் இரத்து செய்யப்பட்டுள் ளது.

மத்திய அமெரிக்காவைச் சேர்ந்த கௌத மாலாவில் உள்ள பகாயா என்ற எரிமலை அடிக்கடி வெடிப்பது வழக்கம். கடந்த வெள்ளி நள்ளிரவில் பகாயா எரிமலை வெடித்தது. இதையடுத்து தீப்பிழம்பு மற்றும் கற்களை கக்கி வருகிறது. இதனால் 2 பேர் உயிரிழந் தனர். 3 குழந்தைகளை காணவில்லை. 50 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

சுமார் ஆயிரத்து 700 பேர் வீடுகளை விட்டு வெளியேறி தவிக்கின்றனர். கௌத மாலா சிட்டி எஸ்குயன்ட்லா நகரங்களைச் சுற்றி யுள்ள பகுதிகளில் அதிபர் அல்வரோ கலோம் அவசர நிலைபிரகடனம் செய்துள்ளார். கௌதமாலா சிட்டி பகுதியில் புகைசாம்பல் பரவியதால் சர்வதேச விமான நிலையம் மூடப் பட்டுள்ளது. பகாயா எரிமலை மேலும் பயங்



கரமாக வெடிக்கும் என புவியியல் வல்லுநர் கள் எச்சரித்துள்ளனர்.

இதுபோல் ஈக்வடார் நாட்டில் துங்குர ஹுவா என்ற எரிமலையும் வெடித்து தீப்பி ழம்பை கக்கி வருகிறது. இது தலைநகர் விட்டோ நகரிலிருந்து 150 கி.மீ. தொலைவில் உள்ளது. இதன் அருகில் உள்ள கிராமங்க ளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டனர். (6)

# கொங்கொங்கின் குடியேற்ற சட்டத்தில் சில மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளது

கடந்த 2009 நவம்பரில் குடியேற்ற விதிகளில் சில திருத்தங்கள் செய்யப்பட்ட பின் கொங்கொங் அரசு தன் நாட்டில் சட்ட விரோதமாகக் குடியேறியவர்கள் மீது கிடுக் கிப்பிடி நடவடிக்கை எடுத்து வருகிறது. கொங் கொங்கில் இப்போது 6 ஆயிரத்து 400 பேர் சட்டவிரோதமாகத் தங்கியுள்ளதாகக் கணக் கெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 75 சத வீதத்துக்கும் அதிகமானோர் தெற்காசியா வைக் குறிப்பாக பாகிஸ்தான் மற்றும் இந்தியா வைச் சேர்ந்தவர்கள். இவர் களில் பலர் அங்கு நல்லவேலைகளில் பணியாற்றி வருகின்றனர்.

கொங்கொங்கின் முந்தைய குடியேற்றச் சட்டப்படி இந்தியாவிலிருந்து 14 நாட்கள் சுற் றுலாவுக்காக கொங்கொங் செல்பவர்கள் விசா எடுக்க வேண்டியதில்லை. 14 நாட்களுக்கு மேல் தங்கியிருப்பவர்கள் மட்டுமே விசா எடுக்க வேண்டும் .மேலும் சட்டவிரோதமாக அங்கு தங்கியிருப்பவர்கள் ஏதாவது ஒரு வேலையில் சேர்ந்து பணியாற்றினால் அது முந்தைய சட் டப்படி பெருங்குற்றத்துக்குரியது அல்ல.

ஆனால் 2009 நவம்பரில் கொங்கொங் குடியேற்ற (திருத்தம்) அவசரச் சட்டம் கொண்டு வரப்பட்ட பின் நிலைமை தலைகீழானது. இச்சட்டம் நிறைவேற்றப்பட்ட பின் 40 பேருக்கு 12 லிருந்து 15 மாதங்கள் வரையும் 23 பேருக்கு ஆறிலிருந்து 12 மாதங்கள் வரை யும் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

ஒருவர் சட்டவிரோதமாக கொங்கொங்கில் தங்கியிருந்தார் என்பது நிரூபிக்கப்பட்டால் அவருக்கு மூன்று இலட்சம் ரூபாய் அபராதமும் மூன்று ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை யும் கிடைக்க இச் சட்டம் வழிவகுக்கிறது. (6)




# மத்திய கிழக்கு அணுவாயுத மாநாட்டில் கலந்து கொள்ளப் போவதில்லை -இஸ்ரேல்

மத்திய கிழக்கு அணுவாயுத பேச்சுவார்த் தைகளில் கலந்து கொள்ளப்போவதில்லை என இஸ்ரேலிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

அணுவாயுதமற்ற மத்திய கிழக்கை உரு வாக்கும் நோக்கில் ஜக்கிய நாடுகள் அமைப் பினால் இந்த மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டி ருந்தது.

தமது நாட்டுக்கு காணப்படும் அச்சுறுத் தல்களை உதாசீனம் செய்து இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் இதனால் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளப் போவ தில்லை எனவும் இஸ்ரேல் அறிவித்துள்ளது.

அணுவாயுத பாவனை தவிர்ப்பு தொடர் பிலான கொள்கைகளுக்கு இதுவரையில் 200 நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

எனினும் இஸ்ரேலிய அரசாங்கம் இந்தத் திட்டத்திற்கு ஆதரவளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த உடன்படிக்கை இஸ்ரேலின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ள தென அந்நாடு சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் இந்த உடன்படிக்கையில் ஏன் கைச் சாத்திடவில்லை என இஸ்ரேல் கேள்வி எழுப் பியுள்ளது.

இஸ்ரேலின் இந்தத் தீர்மானம் தொடர்பில் உலகின் பல நாடுகள் அதிருப்தி வெளியிட் டுள்ளன. (6)

# செயலிழந்த சிறுநீரகங்களுக்கு மேல் புதிதாக இரண்டு சிறுநீரகங்கள்

## மருத்துவத்துறையில் விந்தை

(லிங்கன்ஷயர்)

இங்கிலாந்து நாட்டில் எட்டு வயது சிறு மிக்கு மேலும் இரண்டு சிறுநீரகங்கள் புதிதாக வளர்ந்துள்ளன. இது மருத்துவ உலகில் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இங்கிலாந்தில் லிங்கன்ஷயர் பகுதியில் ஏஞ்சல்டான்ஸ் என்ற சிறுமிக்கு பிறந்தது முதலே சிறுநீரகம் தொடர்பான நோய் இருந்து வந் தது. தொற்று காரணமாக ஏற்பட்ட இந்த நோயால் கடுமையாக பாதிக்கப்பட்டாள். மருத்துவர்கள் ஸ்கேன் செய்து அவளது நிலைமையை கண்காணித்து வந்தனர். அந்த சிறுமிக்கு ஐந்து வயதான போது அவளது சிறுநீரகமோச மாக பாதிக்கப்பட்டது.

சிறுநீரகத்தில் செயற்கை குழாய்கள் பொருத்தப்பட்டன. தற்போது எட்டு வயதாகும் ஏஞ்சலுக்கு இரண்டு சிறுநீரகங்களும் செய லிழந்தன. இதையடுத்து அவளுக்கு மருத்து வர்கள் அறுவை சிகிச்சை மேற்கொண்டனர். அப்போது தான் செயலிழந்த சிறுநீரகங்க ளுக்கு மேலே புதிதாக இரண்டு சிறுநீரகங்கள் இயற்கையாக வளர்ந்திருப்பதை கண்டு பிடித் தனர்.

சிறுநீரக கோளாறால் அவதிப்பட்டு வந்த அந்த சிறுமி தற்போது குணமடைந்து வருகி றாள். இது மருத்துவத் துறையில் பெரும் ஆச் சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக ஏஞ்சலின் தாய் கிளேர் கூறியதாவது, இந்த அதிசயத்தை என்னால் நம்பவே முடியவில்லை. அவளுக்கு பல முறை ஸ்கேன் செய்திருக்கிறோம். அப்போ தெல்லாம் புதிய சிறுநீரகங்கள் வளருவதற்



கான அறிகுறியே தென்படவில்லை. கடவுள் தான் அவளுக்கு செயலிழந்த இரண்டு சிறு நீரகங்களை அகற்றிவிட்டு புதிய ஆரோக்கிய மான சிறுநீரகங்களை அளித்திருக்கிறார் என் றார்.

ஏஞ்சலின் தந்தை மைக்கேல் கூறுகை யில், சிறுநீரக நோயால் கடுமையாக பாதிக் கப்பட்டிருந்த அவள் தற்போது நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு ஆரோக்கியத்து டன் இருக்கிறாள். இப்போது அவளது முகத் தில் புன்னகையை பார்க்கும் போது பெரும் சந்தோஷம் அடைகிறேன் என்று தெரிவித்துள் ளார்.

ஏஞ்சலுக்கு கிசிச்சை அளித்த மருத்து வர் கள் கூறியதாவது, மிக மிக அரிதாக சிலருக்கு சிறுநீரகங்கள் ஒன்றொடொன்று ஒட்டிய நிலை யில் இரட்டை சிறுநீரகங்களாக இருக்கும் இது பிறவிலேயே இருக்கும். ஆனால் ஏஞ்ச லுக்கு செயலிழந்த சிறுநீரகங்களுக்கு மேல் இயற்கையாக இரண்டு சிறுநீரகங்கள் புதி தாக வளர்ந்திருப்பது எங்களுக்கே பெரிய ஆச் சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினார். (6)

# பங்களாதேஷிலும் பேஸ்புக் இணையத்தளத்துக்கு தடை

(டாக்கா)

பாகிஸ்தானைத் தொடர்ந்து பங்களா தேஷும் பேஸ்புக் இணையத்தளத்துக்குத் தடைவிதித்துள்ளது.

இதுதொடர்பாக அதிகார பூர்வ அறிவிப்பு வெளியிடப்பட வில்லையெனினும் பங் களா தேஷ் தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணைய அதிகாரிகளை மேற்கோள்காட்டி டெய்லி ஸ்டார் பத்திரிகை இது குறித்து செய்தி வெளியிட்டுள்ளது.

இஸ்லாமிய விரோதக் கருத்துக்களை சில இணையத்தள உபயோகிப்பாளர்கள் பேஸ் புக் இணையத்தளத்தில் பதிவு செய்வதை அரசு கடுமையாக எடுத்துக்கொண்டதே அந்த இணையத்தளத்தை தடைசெய்வதற்கு காரணம் என பங்களாதேஷ் அதிகாரிகள் தெரி வித்தனர்.

இதே காரணங்களுக்காக பாகிஸ்தானும் பேஸ்புக் இணையத்தளத்தை தடைசெய் தமை குறிப்பிடத்தக்கது. (6)



கௌதமாலா நாட்டில் உள்ள கால்டிராஸ் மாகாணத்தில் எரிமலை வெடித்து சிதறியதில் ஏற்பட்ட சாம்பல் துகள்கள் மலை அடிவாரத்தில் இருந்த ஆயிரக் கணக்கான விடுகளில் விழுந்து தீப்பற்றிக்கொண்டது.

# கௌதமாலா நாட்டில் நிலச்சரிவு ; மண்ணுக்குள் புதைந்து 12 பேர் பலி

(கௌதமாலா சிட்டி)



பசிபிக் கடலில் உள்ள கௌதமாலா நாட் டில் அகதா என்ற புயல் தாக்கியது.


இதனால் பலத்த மழை பெய்தது. இதைத் தொடர்ந்து ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் கரைகளில் உடைப்பு ஏற்பட் டது.


இதனால் ஊருக்குள் வெள்ளம் புகுந்தது. பாலங்கள் அடித்து செல்லப்பட்டன. கடும் மழை காரணமாக நிலச்சரிவு ஏற்பட்டது. எனவே வீடு கள் மண்ணுக்குள் புதைந்தன. இதில் 12 பேர் உயிரிழந்துள்ளதுடன் 11 பேரை காண வில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்து தவிக்கின்றனர். அவர்கள் பாதுகாப் பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள னர். இந்த புயல் பக்கத்து நாடான எல்சால் வேடரையும் தாக்கியது.

எரிமலை வெடித்ததால் சாம்பல் பரவி கௌ தமாலாவில் விமான போக்குவரத்து நிறுத் தப்பட்டிருந்தது. தற்போது பெய்து வரும் பலத்த மழையால் மரங்களில் படர்ந்து இருந்த சாம்பல் சுத்தப்படுத்தப்பட்டுள்ளது. காற்றில் பரவுவதும் குறைந்துள்ளது. (6)







"உள்ளூர் உற்பத்தியால் உயர்வோம்" என்ற தொனிப்பொருளில் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்ற மாகாணமட்ட கண்காட்சி மற்றும் பரிசளிப்பு விழாவின் இறுதிநாள் நிகழ்வில், பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். அரச அதிபர் கே.கணேஷ், யாழ்.பிராந்திய ஆணையாளர் திருமதி சிவலிங்கம் ஆகியோர் மங்கல விளக்கேற்றுவதையும் வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி, உள்ளூராட்சி கூட்டுறவு மற்றும் சிறுவர் நன்னடத்தை அமைச்சின் செயலாளர் திருமதி இ.விஜயலஷ்மி ஆகியோர் உரையாற்றுவதையும் யாழ். விவசாயத் திணைக்களத்தின் பிரதி விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமாருக்கு அமைச்சர் பரிசில் வழங்குவதையும் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவிகளின் கலைநிகழ்வையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள் :-என்.குமார்)

# செவிப்புலன் வலுவற்றோருக்கு வேலைவாய்ப்புகள் வழங்குவதில் அதிக கவனமெடுக்கப்படும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

(யாழ்ப்பாணம்)

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தைச் சார்ந்தோருக்கு எமது அமைச்சினூடாக வேலைவாய்ப்பு கிடைக்க வழிவகை செய்யப்படுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற யாழ்ப்பாணம் சீனியர் லேன் கலட்டியில் அமைந்துள்ள செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன விளையாட்டுக் கழகத்தின் 20ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். புனர்வாழ்வு அமைச்சராக இருந்த காலப் பகுதியில் பல்வேறு உதவித் திட்டங்களை இந்த நிறுவனத்திற்கு வழங்கி இருக் கின்றோம்.

இங்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பில் நாம் நிச்சயம் கவனமெடுப்போம். குறிப்பாக எமது அமைச்சினூடாக செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தைச் சார்ந்தோருக்கான வேலை வாய்ப்புகள் தொடர்பில் கவனமெடுக்கப்படுமென்றும் அமைச்சர் உறுதியளித்தார்.

ஏனைய கோரிக்கைகளை எழுத்தில் தந்துதவுமாறும் கேட்டுக்கொண்டார்.

நிறுவன மண்டபத்தில் விளையாட்டுக் கழகத் தலைவர் பிரகாஷ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த பலர் தமது மொழிகளில் சைகை மூலம் உரையாற்றினர்.

தொடர்ந்து ஏற்கனவே நடைபெற்று முடிந்த விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்று வீரர்களுக்கு அமைச்சரும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவர் பரிசில்களையும் வெற்றிக் கேடயங்களையும் வழங்கி வைத்தனர்.

இதில் திருகோணமலை, கொழும்பு, வவுனியா, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் கலந்துகொண்டனர். (6)

## தொகுதி வாரி தேர்தல் முறைமை

# சிறுபான்மை கட்சிகளுக்கு பாதகமாக அமையக்கூடும்

## அக்கட்சிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

தொகுதிவாரி தேர்தல் முறைமை சிறுபான்மை கட்சிகளுக்கு பாதகமாக அமையக் கூடுமென சிறுபான்மைக் கட்சிகள் தகவல் வெளியிட்டுள்ளன.

தேர்தல் சட்டமூல திருத்தங்களின் போது தொகுதிவாரி தேர்தல் முறைமை குறித்த சட்ட திருத்தம் உடனடியாக அமுல்படுத்த வேண்டாம் என ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் சிறுபான்மை கட்சிகள் உள்ளிட்ட பல கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

தொகுதிவாரி தேர்தல் முறைமை தொடர்பில் ஆய்வு நடத்துவதற்கு போதியளவு கால அவகாசம் வழங்குமாறு தெரிவித்துள்ளன.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உள்ளிட்ட பெருந்தோட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள் இந்த விடயம் குறித்து அண்மையில் கூடி ஆராய்ந்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

பிரதிப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் முத்து சிவலிங்கம் மற்றும் முன்னாள் அமைச்சர்களான பீ.பீ. தேவராஜ் ஆகியோர் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றுள்ளது.

தற்போதைய விருப்பு வாக்கு முறைமை இல்லாதொழிக்கப்பட்டால் மாகாணசபை சபைகளில் தமது உறுப்பினர்களின் பிரதிநிதித்துவம் வெகுவாகக் குறைவடையும் என சுட்டிக்காகட்டியுள்ளனர்.

ஈ.பி.டி.பி. கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோரும் இந்தப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மற்றுமொரு சந்திப்பு எதிர்வரும் 6ஆம்திகதி நடைபெறவுள்ளது. (6)

# ஆங்கில மொழிமூலம் உயர்தரம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை

(கொழும்பு)

ஆங்கிலமொழி மூலம் கல்விபொது தராதர சாதாரண தர பரீட்சைக்கு தோற்றியுள்ள மாணவர்களுக்கான உயர் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவிவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆங்கில மொழி மூலம் உயர் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் பற்றாக்குறை காரணமாக மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

601 பாடசாலைகளில் தரம் 6–11 வரையில் ஆங்கில மொழி மூலம் கற்பிக்கப்படுவதாகவும் இதில் 93 பாடசாலைகளிலேயே ஆங்கிலமொழிமூலம் உயர்தரம் கற்பிக்கப்படுவதாக ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு ஆங்கில மொழிமூலம் உயர் கல்வியை கற்பிக்கும் 93 பாடசாலைகளில் 29 பாடசாலைகள் மேல் மாகாணத்திலேயே அமைந்துள்ளதாகவும் அந்த சங்கம் மேலும் கூறியுள்ளது. (6)

# தமது வருமானத்தை மற்றவர்களுடன் ஒப்பிடுகையில் அதிருப்தி ஏற்படுகிறது

## ஆய்வில் தகவல்

(கொழும்பு)

தமக்குக் கிடைக்கப் பெறும் வருமானத்தை மற்றையவர்களுடன் ஒப்பீடு செய்வதனால் அதிருப்தி ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்களது சம்பளத்துடன் தமது சம்பளத்தை ஒப்பீடு செய்து பலர் அதிருப்தியடைவதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஐரோப்பா முழுவதிலும் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் இந்த விடயம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

24 நாடுகளைச் சேர்ந்த 19 ஆயிரம் நபர்களிடம் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டுள்ளது.

ஒப்பீட்டளவில் அதிக சம்பளம் ஈட்டுவோர் மகிழ்ச்சியுடன் காணப்படும் அதேவேளை, குறைவான சம்பளங்களைப் பெற்றுக்கொள்ளும் பலர் கடும் அதிருப்தியுடன் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக நண்பர்களுக்கு இடையில் இந்த நிலைமை மிகவும் மோசமாக காணப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

நண்பர்களுடைய சம்பளத்தை விடவும் குறைவான சம்பளத்தைப் பெற்றுக்கொள்ளும் நபர்கள் அதிகளவு மன உளைச்சலுக்கு ஆளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வறியவர்களே அதிகளவு தனது சம்பளத்தை மற்றையவர்களுடன் ஒப்பீடு செய்து கொள்வதாகக் குறிப்பிடப்படுகிறது. (6)

கணவனை யமனுக்குக் கொடுத்தாலும் கொடுப்பேன்.சக்களத்திக்கு கொடுக்க மாட்டேன். ~பங்களாதேஷ்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# இரணைமடு நீர் விநியோகத்தை காவேரிப் பிரச்சினைபோல் ஆக்கிவிடாதீர்கள்

இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு நீர் விநியோகிக்கும் திட்டம் விரைவில் அமுல் படுத்தப்படும் எனத் தகவல்கள் வெளியாகி யிருந்தவேளை ,யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அதனை உறுதிப்படுத்தி உரையாற்றினார்.

இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு நீர் விநியோகம் செய்யுங்கள் என்று யாழ்ப்பாண மக்கள் மகஜர்கள் எழுதி அரசுக்கு அனுப்பி யவர்கள் அல்ல.

இந்த நாட்டில் எந்தத் திட்டமும் சரிவராது என்று எங்களுக்கு நன்றாகத் தெரியும்.

அபிவிருத்திப் பணி ஒன்றை எதிர்ப்பதென்றால், அதற்குச் சங்கம் அமைத்துப் போராடவும் நாங் கள் தயங்கமாட்டோம் என்ற உண்மையை நாம் மறந்து விட முடியாது.

ஆதலால் ,இரணைமடுக்குளத்திலிருந்து நீர் விநியோகித்து யாழ்ப்பாண மண் விளைந்து பொங்கும் என்றுஎவரும்எதிர்பார்த்திருக்கவில்லை.

இருந்தும் இரணைமடுக் குளத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு நீர் விநியோகம் வழங்கப் படும் என இந்த நாட்டின் ஜனாதிபதி கூறிய போது,குடி நீருக்காகக் காத்திருக்கும் யாழ். கரையோரப் பகுதி மக்களும்,குடி நீருக்காகத் தொலை தூரம் செல்லும் தீவக மக்களும் ,

அடடா !எங்கள் வாழ்விலும் குருச்சந்திர யோகம் ஏற்படப்போகின்றது என்று நம்பினர். இரணைமடுக்குளத்து நீர் விநியோகிக்கப்பட் டால்,குடிக்கலாம். நன்னீரில் குளிக்கலாம். என்ற விருப்பம் தான் அந்த நினைப்புக்குக் காரணம்.

ஆனால் ,அது எதுவும் நடக்காது.எல்லாம் வெறும் பம்மடாத்து என்பதை ஒரு சில தினங் களுக்கு முன்னர் கூடி எடுத்த தீர்மானம் உறுதி செய்துள்ளது.

குளக்கட்டை இரண்டடி உயர்த்துதல், கிளி நொச்சி மக்களுக்கு குளத்து நீர் போதுமா? இப்போதுதான் இவைபற்றி ஆராய்ச்சி நடக்கிறது.

இந்த ஆராய்ச்சிகளையெல்லாம் யாழ்ப் பாணத்துக்கு இரணைமடுக்குளத்து நீர் விநி யோகிக்கப்படும் என அறிவிப்பதற்கு முன்ன தாக நடத்தியிருந்தால், தேவையற்ற நப்பா சைக்கு மக்கள் ஆளாக வேண்டிய நிலை ஏற் பட்டிருக்காது.

எதுவாயினும், இரணைமடுக் குளத்து நீரை குடி நீருக்காவது இங்கு கொண்டு வர முடி யுமா? என்று சிந்தித்துப் பாருங்கள்.

யாழ்ப்பாணத்துக்கான இரணைமடு நீர் விநி யோகத்தை பிற்போடுதல் என்பது நடவாது என்பதன் மற்றுமோர் சொற்பதம் என்றே எம் சிற்றறிவு சிந்திக்கின்றது.

அன்புக்குரியவர்களே! மலையகத் தமிழ்-இலங்கைத் தமிழ் என்று பிரித்தோம்.வடக்கு-கிழக்கு என்று பாகுபடுத்தினோம்.

இப்போது இரணைமடுக் குளத்து நீரால் கிளிநொச்சி -யாழ்ப்பாணம் என்று பிரித்து நீராடும் ஆபத்து இருப்பதுபோல் தெரிகிறது. ஆகையால் கூட்டம் போட்டு கருத்துக் கேட்டு காவேரி நீர்ப் பிரச்சினைபோல் ஆக்காமல்,

எல்லோரும் உடன்பிறப்புக்கள் என்ற உண் மையில் 'குடிநீர்' அத்தியாவசியம் என்ற அடிப் படையில் இரணைமடுக் குளத்து நீரை இங்கு கொண்டு வாருங்கள்.பின்பு குளத்தை ஆழமாக் குவோம் ,அகலமாக்குவோம்.

திட்டத்தைப் பிற்போட்டால் மகாவலித் திட்டம் போல்...அவ்வளவு தான்.

ஒரு புறம் மீள்குடியேற்றம்.மறுபுறம் நீர் விநியோகம். என்றவாறு திட்டங்கள் முனைப் பெடுக்கட்டும்.

# பல்கலைக்கழக தொலைக்கல்வி வாய்ப்புக்களை பயன்படுத்தி அறிவு வளத்தை மேம்படுத்தவேண்டும்

## யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தொலைக்கல்வி வாய்ப்புகள் தற்போது மேம்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி அறிவு வளத்தை மென்மேலும் செழுமைப்படுத்திக் கொள்ள வேண்டும் என யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் தெரிவித்தார். யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற வெளிவாரி பட்டச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் வாழ்த்துரை நிகழ்த்தும் போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இன்றைய பட்டச்சான்றிதழ் வழங்கும் வைபவத்திற்கு வருகைதந்துள்ள உங்கள் அனை வரையும் எல்லையில்லாத அன்புடன் வரவேற்கின்றோம்.

கல்வி எங்களின் அழியாத பெருஞ்செல்வம். அனைவ ருக்கும் கல்வி எங்களின் உயர்வான பேரிலக்கு. எங்களது உயர்கல்வி அமைப்பின் மட்டுப்பாடுகளால், பல்கலைக்கழக கல்வியை பெறமுடியாமல் போன பிள்ளைகளுக்கான உயர் கல்வி வாய்ப்பாக வெளிவாரிப்பட்ட ஏற்பாடும் ஏனைய தொலைக்கல்வி முறைமைகளும் விளங்குகின்றன.

கல்விக்கான, அறிவுக்கான உங்களின் சுயதேடலை -சுய கற்றல் வாண்மையை - சாதனைகளை மனதார பாராட்டு கின்றோம்.

நவ இலத்திரனியல் ஊடகங்கள் வாயிலாக எங்கள் தொலைக்கல்வி வாய்ப்புக்களை தற்பொழுது மேம்படுத்தி வருகின்றோம். இந்த வாய்ப்புக்களைப் பயன்படுத்தி எதிர் காலத்தில் உங்கள் அறிவு வளத்தை மென்மேலும் செழுமைப்படுத்திக்கொள்ள வேண்டும்.

எங்கள் பல்கலைக்கழகத்தின் கல்வி இலக்குகளை நிறைவாக்கும் பட்டதாரிகளாய் வல்லமைமிக்க, பண்பாட்டு உணர்திறன் கொண்ட, ஆக்கத்திறனும் அர்ப்பணிப்பும் கொண்ட ஆளுமைகளாய் எழுந்திருங்கள்.

மனித-சமூக மேம்பாட்டுக்கான உங்கள் எதிர்கால சாதனைகளில் பெருமையுடன் மகிழ்ந்திருப்போம். உங்கள் அனைவருக்கும் எங்களின் அன்பான வாழ்த்துக்கள் என்றார். (6)

# மாதுகங்கையில் படகு கவிழ்ந்து மூவர் பலி

(கொழும்பு)

அம்பலாங்கொடை மாது கங்கையில் படகொன்று கவிழ்ந் ததில் அதில் பயணித் துக்கொண்டிருந்த மூவர் நீரில் மூழ்கி உயிரி ழந்துள்ளனர்.

சம்பவத்தின் போது குறித்த படகில் சுமார் 15 பேர் வரையில் பயணித்துள்ள போதிலும் மூவரைத் தவிர ஏனையோர் உயிர் தப்பியுள் ளனர். என்று பொலிஸ் ஊடக பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான பிரஷாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

குறித்த விபத்தின்போது உயிரிழந்தவர் கள் அம்பலாங் கொடை மற்றும் கண்டியைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸ் விசாரணை களின் போது தெரியவந்துள்ளது.

இது தொடர்பான விசாரணைகள் அம்ப லாங்கொடை பொலிஸாரால் மேற்கொள் ளப்பட்டு வருவதுடன் உயிரிழந்த வர்களின் சடலங்கள் பிரேத பரிசோதனைகளுக்காக வைத் திய சாலையில் வைக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் பேச்சாளர் கூறினார். (6)

## சட்டமா அதிபர் தலைமையில்

# ஐ.நா. அமர்வில் பங்கேற்க அதிகாரமற்ற குழு பங்கேற்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் 14 வது கூட்டம் இன்று ஜெனீவாவில் ஆரம் பமாகவுள்ளது. இதற்காக இலங்கையில் இருந்து சட்டமா அதிபர் மொகான் பீரிஸ் தலைமையிலான குழு ஒன்று ஜெனீவா நோக்கிப் புறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் பேச்சாளர் ஒருவர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார். இதன்போது இலங்கை தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள யுத்தக் குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் இலங்கையின் பிரதிநிதிகள்குழு விளக் கமளிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்த மாநாட்டில் இலங்கை சார்பாக அனுப்பப்பட்டுள்ள குழு தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை கண்டனம் தெரிவிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

பொறுப்புடைய பல்வேறு உயர்மட்ட அதிகாரிகள் உள்ள போதும் சட்ட மா அதிபர் தலைமையிலான குழு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை தொடர்பிலேயே இந்தக் கண்டனம் தெரிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச-5)

# மின்தாக்கி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் மீன் வாடிக்கு மீன் எடுக்க சென்றவர் மின் தாக்கி படுகாயங்களுடன் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

குருநகர் பகுதியை சேர்ந்த செல்வராசா செல்வன் என்பவரே இவ்வாறு பாதிக்கப்பட்டவரார். இவர் காலையில் மீன் கொள்வனவு செய்வதற்காக குருநகர் மீன் வாடிக்கு சென்று மீன் கொள்வனவு செய்து விட்டு வெளியே உள்ள மின் கம்பத்தில் கைவைத்த போதே அவருக்கு மின் தாக்கியது.

மின் கம்பி ஒன்று அறுந்து மின்கம்பத்துடன் ஒட்டிய நிலை யில் இருப்பதை அறியாத நபர் கையை வைத்த போதே மின் தாக்கி தூக்கி எறியப்பட்டார்.

நேற்று முன்தினம் காலை 7.30 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் பலத்த காயங்களுக்குள்ளான குறித்த நபர் யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (6)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## வீர இளைஞருக்கு



நண்பா ஏன் அழுகிறாய்? உனக்குள் எல்லா சக்தியும் உள்ளது. பலசாலியே உனது எல்லாம் வல்ல இயல்பை வரவழை.மூவுலகும் உனது காலடியில் அமரும். வெல்வது ஆன்மா ஒன்றே ஜட மல்ல. தங்களை உடம்பாகக் கருதுகின்ற மூடர்கள்தான் நாங்கள் பலவீனர்கள், நாங்கள் பல வீனர்கள் என்று கதறுவார்கள். நாடு வேண்டுவது துணிச்சலும் விஞ்ஞான அறிவும் தீரமும் பேராற் றலும் அளவில்லா ஊக்கமுமே. பேடித்தனம் உதவாது. சிங்கத்தின் தீரமுள்ள செயல் வீரனையே திருமகள் நாடுவாள். பின்னால் பார்க்க வேண்டியதே இல்லை. முன்னே செல்லுங்கள்! எல்லை யில்லாத வலிமையும் எல்லையில்லாத ஊக்கமும் எல்லையில்லாத தீரமும் எல்லையில்லாத பொறுமையும் நமக்கு வேண் டும். அப்போதுதான் பெரும் பணிகளை ஆற்ற இயலும்.

வலிமையின்மையே துயரத்திற்கு ஒரே காரணம். நாம் பலவீனர்களாக இருப்பதால் கெட்டவர்களாகிறோம். நம்மிடம் பொய்யும் திருட்டும் கொலையும் வேறு பாவச்செயல்களும் இருப்பதற்குக் காரணம் நமது பலவீனமே. நாம் துன்பமடைவது நமது பலவீனத்தாலேயே. நாம் இறப்பதும் நமது பலவீனத்தால்தான். நம்மைப் பலவீனர்களாக்க ஒன்றும் இல்லாதபோது மரணமும் இல்லை. துயரமும் இல்லை.

# கர்நாடகத்தில் பயங்கர விபத்து; பஸ் கவிழ்ந்து தீப்பிடித்ததில் 30 பேர் பலி

(பெங்களூர்)

கர்நாடக மாநில சித்ரதுர்க்கா மாவட்டம் சர்பரா என்ற இடத்தில் இருந்து பெங்களூருக்கு பயணிகள் பஸ் ஒன்று புறப்பட்டுச் சென்றது. பஸ்சில் 10 குழந்தைகள் உட்பட 64 பேர் இருந்தனர்.



சல்லகேரே என்ற இடத்தில் சென்றபோது எதிரே ஒரு டேங்கர் லொறி வந்தது. எதிர்பாராத விதமாக டேங்கர் லொறியும் பஸ்சும் நேருக்கு நேர் மோதிக் கொண்டன. மோதிய வேகத்தில் பஸ் தீப்பிடித்து அருகில் உள்ள பள்ளத்தில் கவிழ்ந்தது. உடனே பொலிஸாரும், தீயணைப்புப் படையினரும் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர். இந்த கோர விபத்தில் 30 பேர் உடல் கருகி பலியானார்கள்.

காயத்துடன் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த 28 பேரை தீயணைப்புப் படையினர் மீட்டுச் சல்லகேரே மருத்துவ மனையில் சேர்த்தனர். அவர்களில் 3 பேர் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.நேற்று அதிகாலை 3.30 மணிக்கு இந்த விபத்து நடந்தது.

தீயில் பஸ்சின் பெரும் பகுதி எரிந்து சேதம் அடைந்தது. தீயணைப்புப் படையினர் கடுமையாகப் போராடி தீயை அணைத்தனர். பஸ்சாரதியின் கவனக்குறைவே விபத்துக்குக் காரணம் என்று பொலிஸார் தெரிவித்தனர். (6)

# மாவோயிஸ்டுகளை ஒடுக்க கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

## பிரணாப் முகர்ஜி தெரிவிப்பு



(குல்பர்கா)

பேச்சுவார்த்தைக்கு மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் முன்வராவிட்டால், அவர்களை அடக்க கடும் நடவடிக்கையை மத்திய அரசு எடுக்கும் என்று மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்தார்.

தொழிலாளர் நலத்துறை சார்பில் கர்நாடக மாநிலம் குல்பர்காவில் கட்டப்படவுள்ள இஎஸ்ஐ மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரிகளுக்கான அடிக்கல் நாட்டும் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் ,

மேற்கு வங்க மாநிலம் ஜார்கிராம் நகரில் ரயிலை கவிழ்க்க வைத்து நாசவேலையில் ஈடுபட்ட மாவோயிஸ்ட் தீவிரவாதிகளின் செயல் கடும் கண்டனத்துக்கு உரியது. மாவோயிஸ்டுகளின் இந்த நடவடிக்கையால் நூற்றுக்கணக்கான அப்பாவி மக்கள் பலியாகியுள்ளனர். மாவோயிஸ்டுகள் வன்முறையை கைவிட்டு அரசுடன் பேச்சு வார்த்தை நடத்த முன்வரவேண்டும் என மத்திய உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் பலமுறை அழைப்பு விடுத்தும் அவர்கள் அதை ஏற்க முன்வரவில்லை. பேச்சுவார்த்தைக்கு முன்வராமல் தொடர்ந்து வன்முறையில் ஈடுபட்டால் மத்திய அரசு அதை பார்த்துக் கொண்டிருக்காது. மாவோயிஸ்டுகளுக்கு எதிராக மத்திய அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கத் தயங்காது.


மேற்கு வங்கத்தில் தாக்குதல் நடத்தியதன் மூலம் மாவோயிஸ்டுகளுக்கு அமைதியில் விருப்பம் இல்லை என்று தெரிகிறது.

மேற்கு வங்க சம்பவத்துக்குப் பிறகு அவர்களை ஒடுக்க அந்த மாநில அரசுக்கு அனைத்து உதவிகளையும் செய்ய மத்திய அரசு தீர்மானித்துள்ளது என்றார். (6)




# நடிகர் விஜய் அரசியலில் குதிப்பது தவிர்க்க முடியாதது

## எஸ்.ஏ.சந்திரசேகர் பேட்டி



(திருச்சி)


நடிகர் விஜய் அரசியலில் குதிப்பது தவிர்க்க முடியாது என்று திருச்சியில் இயக்குநர் எஸ்.ஏ.சந்திரசேகர் தெரிவித்தார்.

எஸ்.ஏ.சந்திரசேகர் தயாரிப்பில் உருவாகியுள்ள வெளுத்துக்கட்டு திரைப்படத்தின் பாடல் அறிமுகவிழா திருச்சியில் நடந்தது. விழாவில் கலந்துகொண்ட அவர் நிருபர்களிடம் கூறியதாவது ,

நடிகர்களை நம்பி படம் எடுக்காமல் கதாபாத்திரத்தை நம்பி படம் எடுப்பது என்னுடைய வழக்கம்.கதாபாத்திரத்தை நம்பி படம் எடுத்தால் யாரை வேண்டுமானாலும் வைத்து படம் எடுக்கலாம். படத்தில் ஏதாவது விடயத்தை சொல்ல நினைப்பவன் நான். இப்போது படம் எடுப்பது ரொம்ப எளிது. ஆனால் அந்த படத்தை மக்களிடம் கொண்டு சென்று வெற்றி பெறுவது கடினம். இதை எப்படி சமாளிப்பது என்று திரையுலகம் திணறி கொண்டு இருக்கிறது.

தமிழ்நாடு முழுவதும் நடிகர் விஜய் ரசிகர் மன்றம் சிறப் பாக செயல் பட்டு வருகிறது. அவர் எனக்கு மகனாக கிடைத் ததற்காக கடவுளுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

விஜய் தற்போது அரசியலுக்கு வருவதற்கு அத்திவாரம் போட்டு உள்ளார். அவர் நடிக்கும் படங்களுக்கு மக்களிடையே மிகுந்த வரவேற்பு உள்ளது.இதனால் அவரது செல்வாக்கு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.விஜய் அரசியலில் ஈடுபடுவது தவிர்க்க முடியாதது. உரிய நேரத்திற்காக அவர் காத்து இருக்கிறார். (6)



கோடை விடுமுறை முடியும் தறுவாயிலும், முக்கடல் சங்கமிக்கும் கன்னியாகுமரி கடலில், தங்க நிறத்தில் அழகாய் காட்சி தரும் சூரியனைக் காண அதிகாலையிலேயே சுற்றுலாப் பயணிகள் அதிக எண்ணிக்கையில் கூடுகின்றனர்.

# —உத்தர பிரதேசத்தில்— சூறாவளிக்கு 34 பேர் பலி

(லக்னோ)

உத்தரப் பிரதேச மாநிலத்தில் நேற்று முன்தினம் இடியுடன் கூடிய சூறாவளி ஏற்பட்டது. இதன் காரணமாக மரங்கள் முறிந்ததுடன் மின் கம்பங்கள் அறுந்து விழுந்தன. இதில் 34 பேர் பலியானார்கள்.

அதிகபட்சமாக சசாஜன்பூர் பகுதியில் 7 பேர் இறந்தனர். பருக்கா பாத் பகுதியில் 6 பேரும் சிதாபூர் பகுதியில் 5 பேரும் கனுஜ் பகுதியில் 4 பேரும் இறந்தனர். பெரும்பாலான வீதிகளில் மரங்கள் விழுந்ததால் போக்குவரத்து ஸ்தம்பித்தது. (6)




மாவோயிஸ்டுகளின் நாசவேலை காரணமாக மிட்னாபூர் மாவட்டத்தில் ஞானேஸ்வரி எக்ஸ்பிரஸ் ரயில் விபத்துக்குள்ளாகி 100 பேர் பலியாயினர். இந்த சம்பவத்தைக் கண்டிக்கும் வகையில், மணற்சிற்ப கலைஞர், புரியில் வடிவமைத்த மணற்சிற்பத்தை ஏராளமான மக்கள் பார்வையிட்டு, பலியானவர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.


# ராஜஸ்தானில் கடும் வெயிலுக்கு ஒரேநாளில் 12 பேர் பலியாகினர்


(ஜெய்ப்பூர்)

வட இந்தியாவில் தார் பாலைவனம் அமைந்துள்ள ராஜஸ்தானில் கடும் வெயில் கொளுத்துகிறது. வெயில் கொடுமை தாங்க முடியாமல் சுருண்டு விழுந்து பலியானவர்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிரித்தபடி உள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை ஒரேநாளில் வெயிலுக்கு 12பேர் பலியானார்கள். ஜெய்ப்பூர் , கோட்டா மாவட்டங்களில் தலா மூவரும் , சவாய் மாதோபூர், கரவுலியில் தலா இருவரும் அஜ்மீர்,பாரன், ஆல்வாரில் ஒருவரும் வெப்பம் தாங்காமல் உயிரிழந்தனர்.

ஜெய்ப்பூரில் உள்ள கோபால்புரா மேம்பாலத்தில் ஆட்டோ சாரதி ராம அவதார் சுருண்டு விழுந்து இறந்தார். இந்த ஆண்டு கோடை காலத்தில் வெப்பம் தாங்காமல் பலியானவர்கள் எண்ணிக்கை 72 ஐ எட்டி உள்ளது. (6)







மாகாண மட்ட தமிழ்த்தினப் போட்டி நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வெற்றி பெற்ற மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரையும், மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# ரோகித், ஹோலி அபாரம்; இந்திய அணி வெற்றி

(புலவாயா)

ரோகித் சர்மாவின் அதிரடி சதத்தின் மூலம் இந்திய அணி 7 விக்கெட்டுக்களால் இலங்கை



அணியை வீழ்த்தியது.

இலங்கை,சிம்பாவே மற்றும் இந்திய அணிகள் மோதும் முத்தரப்பு சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடர் சிம்பாவேயில் நடைபெற்று வருகிறது.

இதில் இரண்டாவது முதல் சுற்றுப் போட்டி நேற்று புலவாயாவில் நடைபெற்றது. இப்போட்டியில் இலங்கை அணி சார்பில் மூத்த வீரர்களான அணித்தலைவர் சங்கக்கார, மகேல ஜெயவர்த்தன, சனத் ஜெயசூர்ய, மலிங்க ஆகியோருக்கு தொடரிலிருந்து ஓய்வு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கை அணியின் தலைமைப் பொறுப்பை டில்சான் ஏற்றார். இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணித்தலைவர் சுரேஸ் ரெய்னா முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 49.5 ஓவர்களில் 242 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் அஞ்சலோ மத்யூஸ் 95 பந்துகளில் (2பவுண்டரிகள், 2சிக்ஸர்கள் உட்பட) 75 ஓட்டங்களையும் அணித்தலைவர் திலகரட்ண டில்சான் 84 பந்துகளில் (4பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்கள் உட்பட) 61 ஓட்டங்களையும் பெரேரா 32 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் டின்டா, ஓஜா, ஜடேஜா ஆகியோர் தலா 2 விக்கெட் டுக்களையும் யாதவ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 243 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி ரோகித் சர்மா - கோலி ஜோடியின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் 43.3 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 243 ஓட்டங்களைக் குவித்து 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இதில் ரோகித் சர்மா ஆட்டமிழக்காமல் 100 பந்துகளில் (6பவுண்டரிகள், 2சிக்ஸர்கள் உட்பட) 101 ஓட்டங்களை எடுத்து தொடரில் இரண்டாவது சதம்அடித்தார். மற்றும் விராட் கோலி 92 பந்துகளில் (4பவுண்டரிகள் உட்பட) 82 ஓட்டங்களையும் அணித்தலைவர் ரெய்னா ஆட்டமிழக்காமல் 23 பந்துகளில் (3பவுண்டரிகள் உட்பட) 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் குலசேகர, மெண்டிஸ், ராண்டீவ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இவ்வெற்றியின் மூலம் இந்திய அணி 4 புள்ளிகளைப் பதிவு செய்தது.

இத்தொடரின் மூன்றாவது முதல் சுற்றுப் போட்டியின் மூன்றாவது போட்டி நாளை இலங்கை-சிம்பாவே அணிகள் சந்திக்கின்றன.


கொமர்ஷல் வங்கியின்

பொற் கடன்

அடகுச் சேவை



அதிகூடிய முதல்
குறைந்த வட்டி

- தங்க ஆபரணத்திற்கு எதிராக வங்கி மேலதிகப் பற்று வசதி
- தங்க ஆபரணத்திற்கு அதிகூடிய முதல்
- உயர்ந்த இரகசியத் தன்மை
- தங்க ஆபரணத்திற்கு பாதுகாப்பு உறுதி
- குறைந்த வட்டி வீதம்

தற்போது தெரிவு செய்யப்பட்ட கொமர்ஷல் வங்கிக் கிளைகளில் அடகுச் சேவை வசதிகளை பெற்றுக்கொள்ள முடியும்.

COMMERCIAL BANK
www.combank.lk

(C-346)


உலகக் கிண்ண கால்பந்தாட்ட தொடர் - 2010 தென்னாபிரிக்கா

இன்னும் 11 நாட்கள்

## பீலே தந்த வெற்றிக்கிண்ணம்

ஆறாவது உலகக்கிண்ண கால்பந்தாட்ட தொடர், கடந்த 1958 ஆம் ஆண்டு சுவீடனில் நடைபெற்றது. இம் முறை உலகக் கிண்ண கால்பந்தாட்ட தொடரில் முதன்முறையாக சோவியத் யூனியன் இடம்பிடித்தது.

மேலும் அயர்லாந்து, ஸ்கொட்லாந்து, வேல்ஸ் அணிகளும் புதிதாக தகுதி பெற்றன.

### இத்தாலி, உருகுவே பரிதாபம்

இத்தொடரில் தகுதிச் சுற்றுப் போட்டிகளில் 58 நாடுகள் பங்கேற்றன. முன்னாள் சம்பியன்களான இத்தாலி, உருகுவே அணிகள் தகுதிச் சுற்றில் தோல்வியடைந்து பரிதாபமாக வெளியேறின.

### பீலே அறிமுகம்

பிரேசில் அணியின் ஜாம்பவான் பீலே அறிமுகமானார். மொத்தம் 16 அணிகள் முதல் சுற்றில் மோதின. இதன் முடிபில் மேற்கு ஜேர்மனி, அயர்லாந்து, பிரான்ஸ், யுகோஸ்லாவியா, சுவீடன், வேல்ஸ், பிரேஸில், சோவியத் யூனியன் ஆகிய அணிகள் காலிறுதிச் சுற்றுக்கு முன்னேறின.

இச்சுற்றில் சிறப்பாகச் செயற்பட்ட மேற்கு ஜேர்மனி, சுவீடன், பிரான்ஸ், பிரேஸில் அணிகள் அரையிறுதி வாய்ப்பை எட்டின.

இத் தொடரின் ஆரம்பம் முதலே பிரேஸில் அணி வீரர் பீலே அசத்தினார். இவரது அபார ஆட்டம் கைகொடுக்க பிரேஸில் அணி 5:2 என்ற கோல் கணக்கில் பிரான்ஸ் அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

மற்றொரு அரையிறுதியில் சொந்த மண்ணில் தொடரை நடத்திய சுவீடன் அணி 3:1 என்ற கோல் கணக்கில் நடப்பு சம்பியன் மேற்கு ஜேர்மனி அணியை வீழ்த்தி இறுதிப் போட்டி வாய்ப்பைப் பெற்றது.

விறுவிறுப்பாக நடந்த இறுதிப் போட்டி சோல்னா ரசண்டா மைதானத்தில் நடைபெற்றது. சுமார் 60 ஆயிரம் ரசிகர்கள் போட்டியை நேரடியாகக் கண்டுகளித்தனர்.

போட்டியின் ஆரம்பம் முதலே பிரகாசித்த பிரேசில் அணியின் பீலே, வாவா ஆகியோர் தலா 2 கோல்களையும் ஜகோலா ஒரு கோலினையும் அடித்தனர். சுவீடன் தரப்பில் 2 கோல்கள் மட்டுமே அடிக்கப்பட்டன.

இறுதியில் பிரேஸில் அணி 5:2 என்ற கோல் கணக்கில் சுவீடனை வீழ்த்தி முதன் முறையாக உலகக் கிண்ணத்தை கைப்பற்றியது.

இத் தொடரில் 13 கோல்கள் அடித்து ஜொலித்த பிரான்ஸின் ஜஸ்ட் பான்டைன் தங்கப்பாதணி (கோல்டன் ஸூ) விருதைப் பெற்றார்.

நகர சபை, யாழ்ப்பாணம்,






யாழ்ப்பாணத்திலிருந்து பொலிஸ் சேவைக்கு தெரிவுசெய்யப்பட்டவர்களையும் களுத்துறைக்கு அழைத்துச் செல்லப்படு முன்னிலையில் வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் உரையாற்றுவதையும் பயிற்சிக்கு செல்ல பெண் கான்ஸ்டபிள் ஒருவர் ப ஏறுவதையும் படங்களில் காணலாம்.

## லங்கா பத்...

லங்கா ஊடகவிய லாளர்களின் பணிக்கு எதிர் காலத்தில் எவ்வித இடையூறும் மேற்கொள் ளப்பட மாட்டாது என அவ்வரசியல்வாதி உறுதி வழங்கியுள்ளார். (ச-5)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்...

மேலும் அசம்பா விதம் ஏதும் நடக்காமல் இருக்க பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப் பட்டுள்ளது. இச் சம்பவத்தை தொடர்ந்து ஸ்ரீ ரவிசங்கரின் பக்தர்கள் மிகுந்த மன வருத் தத்திற்கு ஆளாகியுள்ளனர். (ச-9)

## மீட்கப்பட்ட சடலங்கள்...

சிறிதரன் தெரிவித்தார்.

சடலங்கள் ஆணா, பெண்ணா என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை என்றும் இவ்வாறாக சடலங்கள் கண்டுபிடிக்கப்பட் டுள்ளதை அடுத்து அந்தப் பகுதியில் மக்கள் பீதிக்கு உள்ளாகியிருப்பதாகவும் சிறிதரன் தெரிவித்திருக்கிறார்.

இந்தச் சம்பவம் குறித்து அறிந்த கிளி நொச்சி மாவட்ட நீதவான் சம்பவ இடத்திற் குச் சென்று விசாரணைகளை மேற் கொண் டதுடன் சட்ட வைத்திய அதிகாரியின் முன்னி லையில் இந்தக் குழியைத் தோண்டி சடலங் களை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை சுமார் ஆறு மாதங்களுக்கு முன்னதாக போடப்பட்டுள்ளதாகக் கருதப்படும் இச்சடலங்கள் கிடந்த மலசல கூடக்குழிமேல் கல்லுகள் போடப்பட்டு அதன்மேல் ஆற்றுமண் போடப்பட்டிருந்ததாக கூறப்படுகிறது.

இதேவேளை கனகபுரம் பகுதியில் இதற்கு முன்னரும் இருபெண்களின் சடலங்கள் கிணற்றிலிருந்து கண்டெடுக் கப்பட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

ஆனால் அப்பகுதியில் தகவல்கள் வெளியே தெரியவிடாமல் மறைக்கப்பட்டுள்ளது. தற்போ தும் காணப்படும் சடலங்கள் குறித்து மக்கள் மத்தியில் அச்சத்துடன் காணப்படுகின்றனர் என சிறிதரன் கூறினார்.

சடலங்கள் காணப்பட்ட பகுதி இராணுவம் மற்றும் பொலிசாரின் பாதுகாப்புக்கு உட்படுத் தப்படுகிறது. அத்துடன் இச்சம்பவம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறனர். (ச-5,9)

## கூட்டமைப்பின் தலைவர் உருத்...

பத்திரிகை செய்தி யொன்றை வெளியிட்டது. இச் செய்தியை ஐரோப்பிய நாடு ஒன்றில் இருந்து வெளி வரும் இணையத்தளச் செய் திச் சேவை ஒன்றும் பிரசுரித்தது.

இச் செய்தியின் உண்மைத்தன்மை குறித் துக் கருத்துக் கூறியபோதே அவர் அவ்வாறு கூறினார். அவர் தெரிவித்தவை வருமாறு,

வடக்குக் கிழக்கு மாகாண மக்களின் பிரதி நிதிகளாக கூட்டமைப்பினர் உள்ளனர். எனவே எமது தலைவராக இருப்பவர் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழ்பவராக இருக் கவேண்டும் என்பது இன்னொரு விடயம்.

நாடுகடந்த தமிழீழ அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் முடிச்சுப்போட்டு செய்தி பிரசுரித்திருப்பது மலடி மகன் முயற் கொம்பில் ஏறி ஆகாயத்தாமரையைப் பிடுங் கினான் என்பது போன்ற அப்பட்டமான பொய்யே ஆகும்.

நாடுகடந்த அரசுக்கு ஆதரவாகச் செயற் பட்டனர் என்கிற குற்றச்சாட்டின் பேரில் கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பாகங்களிலும் கடந்த வாரம் முதல் ஏராளமான தமிழர்கள் படை யினரால் கைதுசெய்யப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் இப்படி ஒருசெய்தி வெளி யாகியிருக்கின்றமையை தமிழ்த் தேசியக் கூட்மைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் களை யும் கூட்மைப்பு உறுப்பினர்களையும் கைது செய்கின்ற நடவடிக்கையின் சூழ்ச்சியாகவே கூட்டமைப்பு காண்கிறது.

இத்தகைய பிரசாரங்கள் மூலம் அரசு எதிர்கால சமாதானப் பேச்சுக்களைக் குழப் பத் திட்டம் இட்டுள்ளது. தமிழ்மக்கள் இது போன்ற செய்திகளால் குழப்பமோ, அச்சமோ அடையத் தேவையில்லை என்றார். (ச-5)

## பொலிஸ் சேவைக்கு இணைக்...

மணிக்கு யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மைதானத்தில் வைத்து சம்பிர தாய நிகழ்வொன்றின் பின் 11 பஸ்களில் அனுப்பி வைக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத் தியட்சகர் பத்மரட்ண தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத் துரை வழங்கிய வடபிராந்திய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி அமரக்கோன்,

யாழ்ப்பாணத்திலிருந்து தமிழ் இளை ஞர்கள், யுவதிகள் பொலிஸ்சேவைக்கு இணைத் துக் கொள்ளப்பட்டமை என்பது பெ சந்தர்ப்பம் ஆகும்.

களுத்துறை பயிற்சிக் கல்லூரிய பெற்றுக் கொள்வதற்காக செல்லு வரும் ஒழுங்காக ,நிறைவாக பய முடித்துக் கொண்டு வந்து யாழ்ப் சேவையாற்ற வேண்டும் எனத் தெ

இதேவேளை பயிற்சி பெறச் சென் கான்ஸ்டபிள்களுடன் அவர்களின் களும் களுத்துறைக்கு அழைத்து பட்டனர்.

## ஜனாதிபதி இந்தியா சென்று

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 8ஆம் திகதி இந்தியாவுக்கு இரு நாள் விஜ யம் ஒன்றை மேற்கொள்கிறார்.

அவர் கடந்த பொதுத் தேர்தல், ஜனாதி பதித்தேர்தல் ஆகியவற்றில் வெற்றி பெற்ற பிற்பாடு இந்தியாவுக்கு செல்கின்ற முதலா வது சந்தர்ப்பம் இதுவாகும்.

அவர் அங்கு டில்லித் தரப்பினரை நேரில் சந்தித்து உரையாடுவார். அவர்கள் அங்கு இலங்கையில் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது உட்பட முக்கியமான பல விட யங்களைப் பேசுவார்கள் என்று நம்பப்படு கின்றது.

குறிப்பாக சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்க வேண்டும் என்று இந்தியா முடியு மானவரை இச்சந்திப்பில் அழுத்தங்களைக் கொடுக்கும் என்று தெரிகிறது.

இந் நிலையில் இரு தரப்பினரும் பேச வேண்டிய விடயங்கள் குறித்தும் ஒருவரை ஒருவர் எப்படி எதிர்கொள்ளலாம் என் தும் பரஸ்பரம் தயார் செய்து வருகி

அதே நேரம் சமாதானப் பேச்சு ஆகுமாறு தமிழ் தேசிய கூட்டமைப் தியா அறிவுறுத்தல் வழங்கி உள்ள இராஜ தந்திர வட்டாரங்களை மே காட்டி செய்திகள் கசிந்துள்ளன.

இது இவ்வாறிருக்க தீர்வுத்திட்ட மாதிரி வரைபு ஒன்றை ஜனாதிப ராஜபக்ஷ இந்திய அரசிடம் கை என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை பொலிஸ் அதிகா அதிகாரம் இல்லாத மாகாண சபை ஒரு பயனும் இல்லை. சமஷ் முறையே இனப் பிரச்சினைக்கா மேல் சபையினால் தமிழர்களு எதுவும் எட்டப்போவதில்லை என தேசியக் கூட்டமைப்பு கருதுவதாக கப்பட்டது.


காணி தேவை

மிருசுவில், எழுதுமட்டுவாழ், முகமாலை, பளை, கிளாலி ஆகிய களில் தென்னைகளுடன் அல்லது தென்னைச் செய் கைச் காணி தேவை.

மிதிவெடி அகற்றப்படாத, அல்லது விடுவிக்கப்படாத காணிகளு கொள்ளப்படும். காணிச் சொந்தக்காரர்கள் அல்லது உரித்த கள் தொடர்பு கொள்வது விரும்பத்தக்கது.

தொடர்புக்கு: 077 9994603


## பொலிஸ் அதிகாரங்கள் எப்போதும்...

இந்நிலையில் சீனா, பாகிஸ்தான், ஐரோப் பிய ஒன்றியம், இஸ்ரேல் மற்றும் அமெரி க்கா ஆகிய நாடுகளில் இருந்து ஆயுதங் களைத் தருவித்ததாக குறிப்பிட்ட அவர் இந் தியாவிடம் இருந்து அனு கூலமான அனைத் தையும் தாம் பெற்றுக் கொண்டதாக தெரிவித் துள்ளார்.

இதே வேளை எவர் தமக்கு அவசரமாக ஆயுதங்களை விநியோகித்தார்களோ அவர் களிடமிருந்து அதனை பெற்றுக்கொண்ட தாகவும் மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள் ளார்.

அவர் மேலும் கூறியதாவது, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த முயற்சித்தபோதும் அதனை அவர்கள் நிராகரித்தனர். இதன்போது அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க நேரிட்டது.

### புலிகளின் சரித்திரம் முடியவில்லை

தமிழீழ விடுதலைப் புலிகளின் சரித்திரம் முடிந்துவிட்டது என தாம் நினைக்கவில்லை. அவர்களின் அனுதாபிகள் இருக்கிறார்கள். அவர்களின் உறங்கும் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பல்வேறு நாடு களில் இருக்கிறார்கள். எனவே தமிழீழ விடு தலைப் புலிகளின் சரித்திரம் முடிந்துவிட்டது எனக் கூறமுடியாது.

இறுதி யுத்தத்தின் போது இருபதாயிரம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டதாக பொய்த் தகவல்கள் கூறப்படுகின்றது. இது சரியான தல்ல. இலங்கை இராணுவம் பொது மக் களை அழிக்கவில்லை. பிரபாகரனின் உற வினர்கள் எமது முகாமில்தான் இருந்தார் கள். அவர்கள் தாக்கப்படவில்லை. இவ் வாறான நிலையில் பொதுமக்கள் தாக்கப்படு வதற்கு வாய்ப்பு இல்லை.

### மீள் குடியேற்றம்

தற்போது முன்னெடுக்கப்படும் மீள் குடி யேற்ற முயற்சிகள் திருப்திகரமாக உள்ளது. முகாம்களில் மூன்று இலட்சமாக இருந்த மக்கள் தொகை இப்போது முப்பதாயிரமாக குறைவடைந்துள்ளது.

கண்ணிவெடிகள் அகற்றப்பட்டதும் இவ்வருட இறுதிக்குள் சகல இடங்களிலும் மக்கள் மீள் குடியமர்த்தப் பட்டுவிடுவர்.

நான் குடும்ப ஆட்சி செய்வதாக குற்றச் சாட்டுக்கள் எழுந்துள்ளன. நான் என்ன செய் யமுடியும்? நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் அவர்களுக்கு ஆணை கொடுத்திருக் கிறார்கள்.

அவர்களைத் தேவையில்லை என்றால் மக்கள் ஓரங்கட்டியிருப்பார்கள். நான் யூன் மாதம் எட்டாம் திகதி இந்தியாவுக்கு வருகி றேன். இதன்போது பல விடயங்கள் முக்கிய மாக பரிசீலிக்கப்படும் என்றார்.

இதேவேளை இந்திய மத்திய அரசு மாநில அரசுகளுக்கு வழங்கிய அதிகாரங் கள் தொடர் பில் குறைகூறுகிறீர்களே எனக் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த ஜனாதிபதி மகிந்த, இந்தியாவை இலங் கையுடன் ஒப்பிட முடியாது எனவும் மும்பைத் தாக்குதலை ஒப்பிடும்போது பொலிஸ் அதி காரங்கள் எப்போதும் மத்திய அரசுடன் இருக்க வேண்டியவை எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ச-5)


பொருளிய

A/L 2010

வெற்றிச் சிகர

- 10 மாதிரிப் பரீட்சைகள் (புள்ளியிடல் திட்டங்களுடன்)
- கருத்தரங்கு (கையேடுகளுடன்

By: M.C.சுதாகரன்

பரீட்சை—03

02.06.2010 புதன் 9.00

பின்வரும் கல்வி நிலையங்களில் ப மேற்கொள்ளலாம்.

- MODERN—நெல்லியடி, பருத்தித்து
- C.C.A—சுன்னாகம், உடுப்பிட்டி
- பொருளியல் அக்கடமி—சங்கானை, ப
- BEACON—யாழ்ப்பாணம்
- புகழ்—சுதுமலை
- திகழ்—இணுவில்

குறிப்பு:- A/L2011,2012 மாணவர்க வகுப்புகளும் நடைபெறுகின்றன. இடங்களில் அனுமதியைப் பெறலா

- கருத்தரங்கு நடைபெறும் திகதிகளை லகத்தில் பெறவும்.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.05.2010 இல் அச்சிட்டு வெளியி